REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு


தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், கர ஆனி ௩௧ 15-7-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 3

JAFFNA COLLEGE LIBRARY JUL 1951 VADDUKODDAI CEYLON.

சாம்பசிவம் அன்ட் கோ.

38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள் விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,

38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# சமயச் சச்சரவு

## உண்மை உணராத காரணம்

### சமூக சீர்திருத்தங்கள் வரவேற்கத்தக்கன

யாழ்ப்பாணம் 13-7-51

விஞ்ஞானம் அளப்பரும் நன்மைகளைத் தந்திருப்பதுடன் உலோகாயதத்தையும் உலகிடை வளம்பெறச் செய்திருக்கின்றது. உலகம் எவ்வளவு தூரம் முன்னேறியிருந்த விடத்தும், நாங்கள் எமது முன்னோர்களிலும் பார்க்கச் சந்தோஷமாக வாழ்கின்றோம் என்று சொல்வதற்கில்லை. இவ்வாறு சுவாமி வீரேஸ்வரானந்தஜி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

சுவாமி அவர்கள் இலங்கையிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் தலைவராவர். அவர் தொடர்ந்து பேசியதாவது: உலக மக்கள் தம்மை எதிர்நோக்கி நிற்கும் அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ள விரும்பினாற் சமயத்திற் போதிய அக்கறை எடுக்க வேண்டும். உரோம இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் ஐரோப்பா அல்லோல கல்லோலப் பட்டது. அந்தக் காலத்திற் கிறிஸ்துநாதரின் போதனைகளே மக்களிடை சமாதானத்தையும் ஒற்றுமையையும் நிலவச் செய்வதற்கு ஏதுவாயின.

கீழைத்தேச ஞானிகளின் போதனைகளை விளங்கிக் கொள்வதற்கு இன்று அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமுள்ள நாடுகள் பல அவாவுகின்றன. இந்நாட்டு மக்கள் தங்கள் நாகரிகமானது சக்தியற்ற அஸ்திவாரத்தில் எழுந்திருக்கின்றதென்பதை இப்போதுதான் உணர்ந்து வருகின்றனர்.

கடந்த நான்கு நூற்றாண்டுகளாக மேனாட்டு நாகரிகமானது கீழைத்தேசங்களில் உரம் பெறலாயிற்று. இதை எதிர்க்குஞ் சக்தி அப்போது இருக்கவில்லை. சுவாமி விவேகானந்தர் அவர்களே கீழைத் தேசங்களின் தத்துவ ஞானங்களை மேனாட்டினர்க்கு விளக்கிக் காட்ட வேண்டிய பணியை மேற்கொண்டார்.

ஒருவரை ஒருவர் கொலை செய்வது எமது குறிக்கோளாக இருக்கக் கூடாது. பொறுமையைப் பொசுக்குவதே எமது நோக்கமாக இருக்க வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் போதனைகள் அகில உலகிற்கும் ஏற்றன. சமய வாதங்களில் இறங்காமல் அவற்றைச் சாதனை செய்தாற்றான் சமய உண்மைகளை உணரலாமென்பது பரமஹம்சரின் போதனையாகும்.

நமது நிருபர் கடிதம்

இன்று சமய சம்பந்தமாக உலகிடை மிகுந்த சச்சரவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு சமயத்தினதும் எல்லையை அனைவரும் அறிந்துகொண்டால் இச்சச்சரவுகள் தோன்ற மாட்டா. எந்தச் சமயமும் முழு உண்மையைத் தான் கண்டிருப்பதாகக் கூறமுடியாது. தமது சமயந்தான் பரிபூரண நிலையை அடைந்திருக்கின்றதென ஒருவர் கூறினால் அது அவரது மத வைராக்கியத்தின் தடிப்பேயன்றி வேறொன்றுமில்லை.

சமயம் சமூகச் சீரமைப்புக்கு இடங்கொடுப்பதாயில்லை எனக்கூறிச் சமயக் கொள்கைகளைப் பலர் தாக்குகின்றனர். உண்மையாகவே சமயத்தில் ஈடுபாடுள்ள ஒருவர் சமூக சீர்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]



டொக்டர் பீ. அருமைநாயகம் அவர்கள் உலக சுகாதார சங்கத்தின் ஆதரவில் அமெரிக்காவிலுள்ள மிச்சிக்கன் பல்கலைக் கழகத்தில் தாய்சேய் சுகாதாரம் சம்பந்தமான வைத்தியத் துறையில் விசேஷ பட்டம் பெற்றுள்ளார். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமுள்ள வைத்தியசாலைகளைத் தரிசித்து விட்டு இவ்வாண்டு செப்டம்பர் மாதம் இலங்கை திரும்புவார். இவர் சுன்னாகத்தைச் சேர்ந்தவர். இலங்கை அரசாங்க வைத்தியராக விளங்குகின்றார்.

# தமிழ் எழுத்து

## புதிய திருத்தங்கள் ஏற்படுதல்

### சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவு

தமிழ் எழுத்துக்களிலே திருத்தங்கள் ஏற்படுவது அவசியமா? அப்படியாயின் அவைகள் யாவை யென்பதை ஆராய்ந்து அறிக்கை வெளியிடுவதற்கெனச் சென்னை அரசினரால் அமைக்கப்பட்ட சபையினர் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார். இவ் விசாரணைச் சபையினர் அபிப்பிராயத்தை அரசினர் அங்கீகரித்து அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முடிவுசெய்துவிட்டனர். இந்திய அரசினர் இத் திருத்தங்களை இனி ஏற்றுக்கொள்வார்கள். வித்தியாசாலைகளில் உபயோகிக்கப்படும் பாட புத்தகங்களிலும் அத் திருத்தங் கட்டாயம் ஏற்படவேண்டுமென்று அரசினர் முடிவுசெய்துள்ளார். கட்டப்பட்ட திருத்தங்களை அங்கீகரித்த பாடபுத்தகங்களே அரசினரால் அங்கீகரிக்கப்படுமெனத் தெரிகின்றது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர்க்கும் இப்புதிய திருத்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கழகத்தினரும் இப்புது முறையான சீர்திருத்த எழுத்துக்களைத் தாராளமாக ஆதரித்து நிற்கின்றனர். இப் பல்கலைக் கழகத்தினரும் ஏற்கனவே இத்திருத்தங்களை அனுஷ்டித்துள்ளார். இப் புதிய திருத்தங்களால் எழுத்துக்களின் தொகை சிறிது குறைக்கப்படுமென்றி வேறு எவ்வித புதிய மாற்றங்களும் கிடையா. தமிழ்ப் பத்திரிகைகளை விரைந்து அச்சிட்டு வெளியிடுதற்கு இத் திருத்தங்கள் பெருந்துணையாகும். தமிழ்மொழியைப் பொறுத்த வரையில் இத்திருத்தம் புதிய மாற்றங்களைக் கொண்டுவரவில்லை.

தமிழ் எழுத்துக்களை ஒழுங்கு படுத்துவதற்காகவும் அச்சுக் கோக்கும் யந்திரங்களிலும் கையச்சுப் பொறிகளிலும் வசதியாக அமைப்பதற்காகவுமே பெரும்பாலோர் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிற் குறைந்த அளவு மாறுதல்களை விசேஷ சபையினர் வகுத்துள்ளனர்.

சீர்திருத்தப்பட்ட முறைப்படி தமிழ் எழுத்துக்களின் தொகை 91. இன்று உள்ள தமிழ் அச்சு எழுத்துக்களின் தொகை 133.

# அமெரிக்காவின் நடத்தை

## விஞ்ஞானமேதை ஸி. வி. இராமன் கண்டனம்

சிலமாதங்கட்கு முன்னர் பங்களூரில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தியாவின் முதல் விஞ்ஞானியாகிய ஸி. வி. இராமன் அவர்கள் கோரியாவில் அமெரிக்கர் தலையிட்டதையும் அங்கே அவர்கள் செய்யும் பயங்கர அட்டூழியங்களையும் கடுமையாகக் கண்டித்தார். அக் கூட்டத்திற் சோவியத்து விஞ்ஞானி பேராசிரியர் வாசென்ற் சோவ் என்பவரும், பெல்ஜிய விஞ்ஞானி ரேசென்வெல்ட் என்பவரும் பிரதான பேச்சாளர்களாக விருந்தார்கள். உலக சமாதானத்தை முன்னேற்றுவதற்காக விஞ்ஞானம் என்ன செய்யவேண்டும் என்பதை யிட்டு அவர்கள் பேசினார்கள்.

பேரறிஞர் இராமன் அவர்கள் தலைமைவகித்துப் பேசுகையிற் கோரியாவில் அமெரிக்கரின் நடத்தைகளை வன்மையாகக் கண்டித்தார். அவர் குறிப்பிட்டதாவது: நீங்கள் இரு பெரும் விஞ்ஞானிகள் பேசக் கேட்டீர்கள். நானும் ஓர் விஞ்ஞானிதான். கொம்யூனிஸ்ட் ருஷ்யாவிலோ, முதலாளித்தத்துவ அமெரிக்காவிலோ இருந்துவரும் விஞ்ஞானிகள் எனக்கு ஒரு தன்மையுள்ளவர்களே. மானுஷீகம் என்னும் கொள்கையையே நான் பின்பற்றுபவன். இம் மானுஷீக தத்துவம் எவருக்கும் ஏற்றதே.

கோரியாவைப் பற்றியும் அங்கே நடைபெறும் படுகொலைகளைப்பற்றியும் நினைக்கும் போது, இது எவ்வளவு கோரமான சம்பவமென்பதை உணருகின்றேன்.



புதுமைப் பித்தன்

புதுமைப் பித்தன் நிதிக்குப் பணந் திரட்டுவதில் இலங்கையிலுள்ள இலக்கிய அன்பர்களும் ஏனைய பிரமுகர்களும் மிகுந்த ஆர்வத்துடன் உழைத்துவருகின்றனர். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தின் விபரத்தை 4-ம் பக்கத்திற் காண்க. வெளியூர் அன்பர்கள் இலங்கையிலிருந்து பணம் அனுப்பியவண்ணமாகவிருக்கின்றனர்.

ஜனநாயகத்தை மக்கள்மீது பலாத்காரமாகவும் படுகொலைகள்மூலமாகவுந் திணித்துவிட முடியாது. அமெரிக்கருக்குக் கோரியாவில் ஒருவித அலுவலும் இல்லை. வடகோரியர் தென்கோரியரைத் தாக்கினாலென்ன, தென்கோரியர் வடகோரியரைத் தாக்கினாலென்ன அதைப்பற்றி அமெரிக்கா எவ்வித அக்கறையும் எடுக்கத் தேவையில்லை. சனங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி அமெரிக்கா ஒருவருக்கும் போதிக்கவேண்டியதில்லை. ஒவ்வோர் அமெரிக்கனும் தேவையாயின் பத்துக் கார்களை வைத்துப் போக்குவரத்து செய்யட்டும். ஆனால் நாங்கள் வைத்திருப்பதை எங்களுடன் விட்டுவிடட்டும்.

சோவியத் நாடு சமாதானம் பற்றிப் பேசும்போது, அது உண்மை உணர்ச்சியையே காட்டுகின்றதென்பதை ஒருவரும் ஆட்சேபிக்கமுடியாது. இரண்டாம் உலக யுத்தத்தின் கோர விபத்துக்களை அனுபவித்த சோவியத்து மக்கள், கால்வாய்கள் வெட்டியும் அணைகள் கட்டியும் சமாதான முறையில் முன்னேறிவருகின்றனர். இவர்கள் யுத்தத்தை விரும்புவார்களென்பது நம்ப முடியாத காரியம்.

அமெரிக்கா செல்வத்தில் இணைக்கும் சக்திவாய்ந்த தேசமென்பதை உண்மையாகவே உணர்ந்தாலும், அமெரிக்கர் கோரியாவில் செய்வதை அங்கீகரிக்கமுடியாது. சீனம், இந்தியா, கோரியா, ஆசிய நாடுகள் பழமைவாய்ந்தவை. ஐரோப்பா அநாகரீகத்தில் அமிழ்ந்திருந்த காலத்தில் நாகரீகமுடையனவாக இருந்தவை. அமெரிக்கரின் நோக்கம் உண்மையாக இருந்தாலும், ஆசியாவுக்குப் போதிக்க இவர்கள் எத்தனிக்கவேண்டியதில்லை.

### ஸ்ரீ ரி. முத்துசுவாமிப்பிள்ளை

#### இந்துக் கல்லூரி மனேஜர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபையாரின் வருடாந்தக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. பள்ளிக்கூடங்களின் மனேஜராக முடிக்குரிய நியாயவாதி ரி. முத்துசுவாமிப்பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக வழக்கறிஞர் பி. கே. சோமசுந்தரம் ஜே. பி. அவர்களும், துணைச் செயலாளராக வழக்கறிஞர் அ. அருளம்பலம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர் வதந்தி

கொண்டோடி

- ஒரு சமயத்தைப் பின்பற்றினால் மட்டும் போதாதாம்.
- அச் சமயபோதனைகளை நன்கு பயிலவும் வேண்டுமாம்.
- மந்திரி பண்டாரநாயகாவே இச் சித்தாந்தத்தைக் கூறினாராம்.
- சமயத்துக்குத் தக்கவாறு பேசுவதில் இந்த மந்திரியார் மகா கெட்டியாம்.
- கெட்டியான சாயத்துக்கு எப்போதும் மதிப்புத்தானும்.
- சிங்கள மகாசபையும் மதிப்பான அரசியற் கட்சியாம்.
- யூ. என். பி. கட்சியுடன் சேர்ந்தபின்னர் மதிப்புக் குறைந்துவிட்டதாம்.
- யூ. என். பி. சிங்கள மகா சபையின் தீர்மானங்களை மதிக்கவில்லையாம்.
- மதியாதார் முத்தம் மிதியாமை கோடி பெறுமாம்.
- மந்திரி பண்டாரநாயகா மதிக்கத்தக்க பேர்வழியாம்.
- யூ. என். பி. அவரை மதியாவிட்டால் அவர் நாட்டிலே மதிப்பைத் தேடிக் கொள்வாராம்.
- மதிப்பான நூல்களை மக்கள் தேடிவாங்குவார்களாம்.
- காரிலே கொண்டுசென்று வீடுகளிற் கொடுக்கவேண்டியதில்லையாம்.
- 'பெற்றோல்' செலவன்றிப் புத்தகம் விற்றபாடில்லையாம்.
- சுதந்திரத்தை விற்பவர்களும் இருக்கின்றார்களாம்.
- இவர்கள் சுதந்திரத்தைப் பற்றித் தம்புபறக்கப் பேசுவார்களாம்.
- இந்த அப்பாவிகள் கொட்டாவிப் பேர்வழிகளாம்.
- முட்டான் விடும் கொட்டாவி கவிதை உருவம் பெறுகின்றதாம்.
- கவிதைக்கு உருவம் அவசியமாம்.

## தமிழாசிரிய சமுதாயம்

### சிறப்புறுவது அவசியம்

தமிழாசிரிய சமுதாயம் இன்றைய நிலையில் ஓர் உடைந்த குடம் என்றும் மட்குடம் போலன்றி அது திருத்தியமைக்கக் கூடியதென்றும் அ. இ. த. ஆ. சங்கச் செயலாளர் திரு. ஜே. எம். தங்கராசா அவர்கள் 'ஆசிரிய சமுதாயம்' என்னும் பொருள்பற்றிச் சமீபத்தில் நடைபெற்ற ஊவாமாகாணத் தமிழாசிரியர் சங்கக் கூட்டத்திற் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டம் வதுளை சரஸ்வதி வித்தியாசாலையில் சமீபத்தில் நடைபெற்றது. திரு. கே. வி. நடராசா அவர்கள் எம். பி. தலைமை வகித்தார். திரு. தங்கராசா அவர்கள் ஆசிரியர்களின் விதவை, அனாதை உபகாரச் சம்பளத்தைப் பற்றிக்குறிப்பிடுகையில், அதுவிஷயமாகச் சிலர் பிரதம மந்திரியைப் பேட்டி கண்டதாகவும், பிரதமர் ஆச்சரியமாக அச்சௌகரியங்கள் உங்கட்குக் கிடைப்பதில்லையா? என்றுகேட்டது நகைப்பும்வியப்பும் ஊட்டுவதாக இருந்ததென்றும், முடிபாகப் பிரதமர் இன்னும் இரண்டொரு மாதங்களில் ஆசிரியர்களுக்கு விதவை, அனாதை உபகாரச்சம்பளம் தருவதாக வாக்களித்துள்ளார் என்றுங் குறிப்பிட்டார்.

திரு. எஸ். எம். சுப்பையா எம். பி. பேசுகையில் தமிழாசிரியர்கள் தற்பொழுதும் தாழ்த்தப்பட்டவர்களாகவே மதிக்கப்படுகிறார்கள். எனினும் அவர்களின் சேவை பெரிதென்றும், படிப்படியாக, சுயபாஷை, அரசாங்க பாஷையாக மாறிவரும் போது அவர்களின் நிலைமை திருப்தியடையலாமாயினும் பயிற்றப்பட்டவர்கள் என்ற முறையில், ஆங்கில, தமிழ், சிங்கள ஆசிரியர்கள் சமமானவர்கள் எனவும் கூறினர்.

பின்வரும் பிரேரணைகள் நிறைவேறின:

1. தமிழாசிரியர்களின் புதிய வேதனம் சம்பந்தமாக அ. இ. த. ஆ. சங்கம் கல்வியதிகாரிக்குச் சிபார்சு செய்யும் திட்டத்தை ஊவா மாகாணத் தமிழாசிரியர் சங்கம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறது.

2. கூடிய விரைவில் அரசாங்கம் சுயபாஷையை அரசாங்க பாஷையாக்க வேண்டுமென்று இச் சங்கம் அரசாங்கத்தை அன்புடன் கேட்டுக் கொள்கிறது.

சங்கச் செயலாளர் தி. வி. பொன்னம்பலம் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

## ஆசிரியருக்குக் கடிதம்

### நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆகமப் பிரமாணங்களுக்கமையப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கவில்லை என்றும், மூலஸ்தானத்தில் மூர்த்தியல்லாது வேல் இருப்பது சைவ ஆகமங்களுக்கு முற்றிலும் முரண்பாடானதென்றும் அதைத் திருத்தியமைக்க முயற்சித்தும் பலிக்காமையால் எங்கள் சைவப் பெரியார் ஆறுமுக நாவலர் அக்கோயிலுக்குச் செல்வது பாவம் என்று கூறிக் கூடிய அளவில் எதிர்ப்பிரசாரமும் செய்தார். அப்படியிருந்தும் நாவலர் பெருமானைப் போற்றி வழிபட்டு வரும் அவர் தொண்டர்களும் மற்றும் ஆகமவாதிகளும் அங்கு சென்று வழிபட்டுவருகிறார்களே, இது சரியா? இது முறையா? இது தருமந்தானா?

"ஒரு சந்தேகி"

நல்லூர்
5-7-51.


~~ காங்கேசன்துறையில் ~~

திறமான ஜெர்மன் சிமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல், பயர்ஸ்ரோன் ரயர், ரீப்புகள் மற்றும் பலசாய்ப்புச் சாமான்களும் விலை சகாயமாய்க் கிடைக்குமிடம்:—

நியூகோ ட்ரேடிங் கம்பனி

காங்கேசன்துறை

தந்தி விலாசம்: "நியூகோ" :: டெலிபோன்: நம்பர் 25

[4344]



சகல பயிர்களுக்கு

# C C C பசளைகள்

## இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

## நாங்கள்

# C C C

# கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

## கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி,

லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

**The Colombo Commercial Company, LIMITED.**

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: [illegible] தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4337]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**✯ இக்காலத்துச் சில பாடல்களிற் கவிதையின் தன்மை குறைந்து பிரசாரவெறி அதிகமாகத் தொனிக்கின்றது.**

# பாரதி இலக்கியம்

## மக்கள் வாழ்க்கையின் குரல்

பேராசிரியர்
அ. சீனிவாசராகவன்

இன்றைய இலக்கியத்துக்குப் பாரதி இலக்கியத்தைக் கிரீடமாகக் கொண்டு பிற்காலத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும், அதனால் கிடைத்துள்ள நன்மை தீமைகளையும் பரிசீலனை செய்யலாம்.

பாரதிக்குப் பின்னர் உள்ள இக்காலத்தைப் பாரதி சகாப்தமெனக் குறிப்பிடுவது மிகவும் சரியானதென்றே தோன்றுகின்றது. பாரதிக்குப் பின்னர், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழில் வெளியாகி வந்துள்ள பாடல்கள் அனைத்திலும் பாரதியின் எதிரொலி தொனிக்கின்றது.

இன்றுள்ள பாடல்கள் பலவற்றில், அவற்றை இயற்றியவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ, விரும்பியோ விரும்பாமலோ, அமரகவி பாரதியின் குரல் எதிரொலி செய்வதை நாங்கள் தெளிவாகக் கேட்கின்றோம்.

பாரதியார் சிறந்த புலவர் என்ற முறையிலேதான் கதை, வசனம் முதலிய துறைகளிலும், ஏனைய காரியங்களிலும் சாதித்துள்ளார். பாரதி வகுத்த பாதையைவிட்டுப் பிரிந்து செல்பவர்களும், அதை ஏற்காமல் வேறு வழிகளிற் செல்பவர்களும், அவரின் மேதையையும் சிறப்பையும் ஏற்றுக்கொள்ளுகின்றனர்.

பாரதி வகுத்த பாதைதான் எது? அது காட்டில் யானை சென்றது போன்றதாகும். அடர்ந்த காட்டில் யானை புகுந்து செல்லும்போது அது போவதற்கென ஒரு பாதையை ஏற்படுத்திச் செல்லுகின்றது. அப்பாதையானது பின்னாற் செல்பவர்களுக்கு உதவியாக அமைந்து விடுகின்றது. அதே போன்று தமிழ் இலக்கியக் காட்டிலே பிற்காலச் சந்ததியாருக்குப் பாரதியார் பாதை சமைத்துத் தந்துள்ளார்.

பாரதியாரின் பாடல்கள் அனைத்திலும் அன்னாரின் கவிதா சக்தி, தன்மை யென்பன நன்கு புலனாகின்றன. அவர் ஓர் உண்மைப் புலவர். மொழிக்கு மொழி அன்பதுடன் அவற்றுள் எளிமை, தெளிவு, வேகம், அழகு என்பன தேங்கிக்கிடக்கின்றன. சிறந்த கவியின் பண்புகளும், குணங்களும் பரிமளிக்கின்றன. கவியின் அற்புதமான சாதனை இது ஒன்றாகும்.

இசையின் மந்திர சக்தியை உணர்ந்து அதனையும் பாரதியார் உபயோகப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இசைப் பாடல்கள் ஒட்டிய கவிதைகளை அவர் கையாண்டுள்ளார். தமது அனுபவத்தைப் பிறர் அனுபவமாகத் தோற்றுவிக்கச்செய்வதே கவியின் தன்மையாகும். இது பாரதியாரிடம் பூரணமாகக் காணப்படுகின்றது.

இசையின் சக்தியை உணர்ந்து நாட்டுப் பாடல்களைக் கிராமிய மெட்டுக்களில் தீவிரமாக இயற்றியிருக்கின்றார். மக்கள் வாழ்க்கையை ஒட்டிய தகை அவர் கையாண்ட விஷயங்கள் பல உள. இக்காலத்தவர்கள் இவற்றைப் பின்பற்றிவருகின்றனர்.

மக்கள் வாழ்க்கையின் குரலாக, எதிரொலியாக, கண்ணாடியாகப் பாரதியார் நிற்கின்றார். மேலும் வாழ்க்கைக்கு எட்டாத இரகசியம் ஒன்றுளதென்பதையும் அவர் எடுத்துக் கூறியுள்ளார். தத்துவ சமயத்துறைகளிற் சென்ற ஞானிகளின் போக்கிலே பல பாடல்கள் இருக்கின்றன. மாணிக்கவாசகரைப் போலப் பக்தர் என்றோ நம்மாழ்வார் போல் ஞானி என்றோ சொல்ல முடியாதென்றாலும் அவர்களிடம் காணப்படும் தத்துவங்கள் பாரதியாரின் வேதாந்தப் பாடல்கள், கண்ணன் பாடல்கள் என்பனவற்றுள் நிறைந்துள்ளன. இவை நம் நாட்டின் மரபுக்கு உகந்ததாகவும் இருக்கின்றன.

தாம் சொல்ல வேண்டியவற்றைப் பாரதியார் பாடல்கள் மூலம் விளக்கியுள்ளார். இன்று பிரசாரத்தில் இறங்கியுள்ளவர்கள் கவிதைக்கு 'மெல்லிய குரல்' வேண்டுமென்பதை மறந்து பாரதியாரின் வழியிலிருந்தும் விலகிவிட்டார்கள்.

இக்காலத்துச் சில பாடல்களிற் கவிதையின் தன்மை குறைந்து பிரசார வெறி அதிகமாகத் தொனிக்கின்றது.

பழையதைத் தேவைக்கு உகந்தவண்ணம் மாற்றியமைக்கலாமென்ற விஷயத்திலும் பாரதியார் வழிகாட்டியுள்ளார். பாரதியாரின் பாடல்களில் நாடகப்பண்பும் அமைந்துள்ளது.

பாரதியாரின் இலக்கியத்தொண்டின் மேன்மையை உணர்ந்து அவர்காட்டிய வழியைப் பின்பற்றிச் சென்றால் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் நன்மை ஏற்படுவது நிச்சயம்.

---

ஐரோப்பா யாத்திரை

**✻ வேந்தன் அடி வெல்க என்று வாழ்த்தி மெதுவாக வாடிவீடு வந்து சேர்ந்தேன்.**

# கூட்டுறவுக் கிராமம்

## மகிழ்ச்சியான வாழ்க்கை

[சென்றவாரத் தொடர்ச்சி]

வழக்கறிஞர்:
அ. அருளம்பலம்

சுவீடினிலுள்ள கூட்டுறவு ஸ்தாபனங்கள் சமூக சேவையிலும் மிகுந்த ஊக்கம் காட்டிவருகின்றன. ஸ்டொக்கோம் பட்டினத்திலிருந்து சுமார் 15 மைல் தூரத்தில் குஸ்ராவ்ஸ்பேர்க் (Custavesberg) என்று ஒரு கிராமம் உண்டு. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இக் கிராமத்தை ஓர் நாட்டாண்மையுடைய முதலாளி ஆண்டார். இங்குள்ள ஆடுமாடுகளையும் மனிதர்களையும் இவர் கட்டி அவிழ்த்தார். கிராமத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் சட்டிபானை வனைபவர்களாக இருந்தார்கள். முதலாளியின் அக்கிரமம் பொறுக்கமுடியாத குயவர்கள் இரகசியமாக ஒரு சங்கம் கூடி தம்மை மீட்க வழிதேடினார்கள். சுவீடின் கூட்டுறவு மொத்த ஸ்தாபனம் இதை அறிந்து அவர்களுக்கு உதவிபுரிந்தது. தனது இலாபத்தில் ஓர் பகுதியைக் கொடுத்து முதலாளியிடம் ஆலையைத் தொழிலாளர் சார்பாக வாங்கி அதைப் புதுக்கி அமைத்தது. ஆலைத் தொழிலாளர்களுக்குச் சுகாதாரமான வீடுகள் கட்டிக் கொடுத்தது. பாடசாலை, கிராம முன்னேற்றச் சங்கம் முதலியன ஸ்தாபித்து மக்களுக்கு விடுதலையும் பெற்றுக் கொடுத்தது. இன்று குஸ்ராவ்ஸ்பேர்க் ஒரு திவ்விய கூட்டுறவுக் கிராமமாகத் திகழ்கின்றது. இங்குள்ளவர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்து வாழ்க்கையைச் சந்தோஷத்துடன் நடத்துகின்றார்கள். தமது கூட்டுறவு ஆலையில் உலகம் உவக்கத்தக்க களிமண் ஓவியங்கள் செய்து இன்புறுகின்றார்கள்.

### மக்கள் ஆட்சி

சுவீடினில் தங்கி இருந்த போது அங்குள்ள பிரதிநிதிகள் சபையைப் பார்க்க எனக்கு வசதி கிடைத்தது. அங்குள்ள எழுபது லட்சம் மக்களுக்கும் பிரதிநிதிகளாக 240 அங்கத்தவர் பிரதிநிதிகள் சபையில் இருக்கின்றனர். இங்கிலாந்தில் உள்ள அரசரைப் போலவே சுவீடினிலுள்ள மன்னர் மக்கள் ஆட்சியை ஆதரித்து வருகின்றார். ஆகவே அங்கே ஒற்றுமையும் அபிவிருத்தியும் ஏற்படுகின்றன. பிரதிநிதிகள் சபையிலே இப்போது பரஸ்பர விவகார சனநாயகக் கட்சி (Social Democrats) அரசாங்கம் ஏற்று நடாத்துகின்றது. இக்கட்சிக்கு அடுத்தாற்போற் சக்திமிக்க கட்சி லிபரல் கட்சி (Liberals) யேயாகும். இங்கிலாந்திலுள்ள பிரதிநிதிகள் சபையைப்போல் அல்லாமல் இங்குள்ள அரசாங்கத்தை நிர்வகிக்கும் கட்சியும் பிரதிநிதி சபையிலே தனித்தனியாக அல்லாமல் ஒருமித்து வீற்றிருக்கின்றார்கள்.

### உறைபனி

சுவீடின் அதிக குளிருள்ள தேசம் என்று முன் குறிப்பிட்டேன். ஒரு நாட்காலை நான் விழித்தெழுந்த போது எங்கும் ஒரே வெள்ளையாகத் தோன்றியது. விருந்தினர் நிலையத்தின் யன்னல் வெளியால் காணப்பட்ட மரங்கள் வெளுத்துப்போய் இருந்தன. வெளியே வந்து பார்த்தேன். கட்டிடங்களின் கூரைகள் எல்லாம் பனியால் மூடப்பட்டிருந்தன. [illegible] ஸ்டொக்கோமிலுள்ள நூதனசாலை, மிருகசாலை முதலியன பார்ப்பதாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. காலை ஒன்பது மணியாகியும் பனி குறைந்ததாக இல்லை. புறப்பட்டோம். வீதியிற் செல்லும்போது உறைந்த பனி வெள்ளைப் பூக்களின் இதழ்கள் போல் உடம்பில் சொரிந்த வண்ணமாக இருந்தது தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

---

# நற்கதிரைப் பதி

பண்டிதர், ஆ. சி. நாகலிங்கபிள்ளை

## திருப்புகழ்

பளிக்கு நீர்சொரி பான்மையின் ஓடிநின்
றொளிக்கு நல்லிட மின்றிநின் றேங்கிடும்
தெளிக்கு மாணிக்க மாநதி யோடிடும்
— உயர்கானில்

குளிக்கு மாதர வோடுநல் லடியவர்
களிக்கு நன்மன மாய்த்தலை கைகளில்
முளிக்க வேந்திடு தூபமுந் தீபமும்
— முழுநீறும்

மொழிக் கரும்பினி றற்பெருங் காவடி
பளிச்செ னும்மயிற் றோகையிற் காவடி
கொழித்த செந்தினை மாவினில் நெய்சொரி
— கொழுந்தீபம்

மொழிப்பெ ரும்புல வோர்களும் மூதுணர்
வளிக்கு நல்லற வோர்களும் அன்பரும்
சுழித்த லைப்புன வேடர்கள் வாழ்பதி
— தனைமேவி

களிக்கு நெஞ்சின ராய்அர ஓம்என
மொழிக்கு மேல்மொழி மூதண்ட மோடிட
ஒளிக்கு ளேஒளி யாய்நின்ற சோதியை
— உளநாடி

விழிக்குள் நன்மணி விண்மணி சொன்மணி
வெளிக்கு வெள்ளொளி யாகிடு விண்மணி
துளிக்கு நல்வர மீந்திடு நன்மணி
— துகடீர்ந்த

கொழிக்கு நீர்நிறை யுங்கடன் மீதினில்
ஒளித்த மாவெனும் உயரிய சூரனை
அழித்து வல்வினை நீங்கநின் றூடிடும்
— அரியேறே

தெளிக்கு நற்கடல் சூழ்இலங் காபுரி
களிக்க நின்றிடு நற்கதி ரைப்பதி
செழிக்க நின்றிடு மாமறை தேடிடு
—தம்பிரானே.

---

விலை அறிவிப்பு

ஊட்வார்ட்ஸ்
'கிறைப் வாட்டர்'

ஊட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரின்
உண்மையான சில்லறை விற்பனவு விலை

ரூபா 2 ஒரு போத்தல்
[எங்கு உள்ளூர் வரி செல்லுபடியோ அது உள்பட]

கூடுதலாகக் கொடுக்கவேண்டாம்

ஊட்வார்ட்ஸ் கிறைப் வாட்டரை நீர் வாங்கும்போது



ஒவ்வொருபோத்தலிலும் இவ்வடையாளத்தைப் பார்த்து வாங்கவும்

போலிகளில் எச்சரிக்கையாயிருங்கள்!

WW I-III W. WOODWARD, LTD., LONDON, ENGLAND.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930

# ஈழகேசரி

சுன்னாகம், கர ௵ ஆனி ௩௧
— ஆண்டு 22 —
பேசுந் தந்தி இல. 805

## ஈரானில் நெருக்கடி

மத்திய ஆசியாவிலுள்ள நாடுகள் பொதுவாக மண்ணெய்க்குப் பேர்போனவை இந் நாடுகளிலுள்ள மண்ணெய்க் கிணறுகளைக் குத்தகைக்குப் பெற்று அதிலிருந்து மண்ணெய், பெற்ரேல் என்பனவற்றை வடித்துத் தூய்மைப்படுத்திப் புற நாட்டினர்க்கு அளிப்பவர்கள் பிரிட்டிஷாரும் அமெரிக்கருமே. பேர்ஸியா என்று சொல்லப்படும் ஈரான் பிரதேசத்தில் மண்ணெய் மிக அதிகமாகப் பெறப்படுகின்றது. இவ் எண்ணெயை வடிகட்டிப்பெற்று உலகிலுள்ள நாடுகட்கு அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பிரிட்டிஷ் கம்பனியாருக்கும் ஈரான் அரசினர்க்கு மிடையிற் சடுதியாகப் பெரிய சச்சரவு ஏற்பட்டுவிட்டது. தமது நாட்டிலுள்ள எண்ணெய்க் கிணறுகளைத் தம்மிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறும்படி ஈரான் அரசினர் நெருக்குகின்றனர். சென்ற ஐம்பது வருடமாக அதிக பணம் முதலிட்டு இத்தொழிலை நடத்திவரும் பிரிட்டிஷ் கம்பனியார் செய்வது யாதெனவறியாது விழிக்கின்றனர்.

மிகக் கீழ்நிலையிலிருந்த மத்திய ஆசிய நாடுகள் இன்று விழித்தெழுந்து தமது கடமைகள், சுதந்திரங்கள், உரிமைகள் யாவை என்று உணர்ந்துவிட்டன. ஐம்பது கோடி ரூபா பெறுமதியான எண்ணெய் ஈரானிலிருந்து பிரதி வருடமும் வெளியேறுகின்றது. இப்பணத்தில் நூற்றுக்குப் பத்து வீதந்தானும் ஈரான் அரசினர் பெறுவதில்லை. இந்நிலையில் ஈரான் தேச அரசினர் கைக்கொண்ட முறை பிழையெனக் கூற முடியாது. சென்ற நானூறு வருடங்களாக ஐரோப்பியர் கீழைத்தேச நாடுகளைக் கொள்ளையடித்து அவர்கள் செல்வங்களை உறிஞ்சியே தாம் அட்ட ஐஸ்வரியங்களுடன் மிக ஆடம்பரமாக வாழ்ந்தனர். இன்னும் அப்படிச் செய்ய இயலுமா? ஆசிய நாடுகள் யாவும் சுதந்தரத்தைப் பெற்றுவிட்டன. அங்கு அடிமை மனப்பான்மை அகன்றுவிட்டது. இன்னும் தந்திரங்களாற் பணத்தைக் கொள்ளையடிக்கலாமென்று வெள்ளையர்கள் எண்ணுவது விசித்திரமாக இருக்கின்றது. எனவே இந்த எண்ணெய்க் கிணறுகளை அந் நாட்டினர்க்குக் கையளித்து நாட்டினைவிட்டு வெளியேறுவதே பொருத்தமான செயலாகும்.

ஈரானிலுள்ள எண்ணெய்க்கிணறுகளில் அமைக்கப்பட்ட யந்திரங்கள் எத்தனையோ கோடி பவுண் பெறுமதியுள்ளன. அங்கே மூவாயிரம் வெள்ளையர்கள் பணியாற்றுகின்றனர். இவைகட்கெல்லாம் யார் பொறுப்பென்ற கேள்வி கிளம்புகின்றது. இவ்வேலையாட்கள் விரும்பின் ஈரான் அரசினரின் கீழ் அமைந்து கடமையாற்றலாமே. இன்றேல் தாம் இந்தத் தொழிலுக்கு இட்ட பணத்தை அரசினருடன் கலந்து ஆலோசித்து ஒழுங்கு செய்துகொள்ள வேண்டியதுதான். இவ்வளவு நீண்ட காலமாக இந்த வெள்ளைக்காரக் கம்பனியார் பெற்றுவந்த இலாபத்தை நோக்குமிடத்து இங்கு அமைக்கப்பட்ட யந்திரங்களின் பெறுமதி பெரிதன்று. இப்படியாக இந் நாட்டுச் செல்வமானது, நாட்டிற்கும் மக்கட்கும் உபயோகப்படாது, அவமே சூறையாடப்பட வேண்டிய தாயிற்றே என்று யார்தான் கவலையடையார். இன்னுந் தமது கபட நாடகத்தை நடத்தலாமென்று வெள்ளையர்கள் எண்ணுவதுதான் மிக நூதனமாகின்றது. ஒரு நாட்டினை இன்னொரு நாடு ஆக்கிரமிப்பதும், ஒரு நாட்டுச் செல்வத்தை இன்னொரு நாடு கவருவதுமாகிய ஒவ்வாத தூர்க்கிருத்தியங்கட்கு இன்னும் எல்லை வராதிருப்பது மிக வேடிக்கையாகின்றது.

ஆகையால் இந்த எண்ணெய்க் கிணறுகளைப் பராமரிக்கும் கம்பனியார்கள் இவ் விஷயத்தில் நீதியாக நடக்கவேண்டியதுதான். பழைய முறையில் ஏமாற்றி இலாபமடையலாம் என்ற எண்ணத்தை முற்றாக விட வேண்டும். ஈரான் அரசினர் இவர்களுடன் கலந்தாலோசித்துச் சிறிதுகட்ட ஈடு கொடுக்கவரின் அதைக் கொடுப்பதே முறையாகும். இந்தக் கிணறுகளை ஈரான் அரசினரே நேரே தாம் நடத்திவரின் இதுவரையில் இந் நாட்டின் செல்வநிலை சிறப்படைந்திருக்கும்.

பிரிட்டிஷ் கம்பனி நீண்ட காலமாக அடைந்துவந்த கொள்ளை இலாபத்தையும், இச்சிறிய நாட்டினர் அடைந்த பரிதாபநிலையையும் நட்டத்தையும் நோக்குமிடத்து எவரும் ஈரான் அரசினர் செய்கையில் அனுதாபங் காட்டாதிருப்பதெப்படி? ஈரானில் மாத்திரமல்ல, மெஸப்பட்டோமியா, அரேபியா முதலிய இடங்களிலுள்ள எண்ணெய்க் கிணறுகளும் விரைவில் அந்த நாட்டினரின் பரிபாலனத்தின் கீழ் வரவேண்டியனதான்.

## வசாவிளான் தபால் நிலையம்

இத் தபால்நிலையம் 16-7-51 தொடக்கம் சகல உரிமைகளும் பெற்ற A வகுப்புக் கந்தோராகும். இனி, வசாவிளான், பலாலி தெற்கு (பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை உட்பட) ஆகிய இடங்களுக்குரிய தபால், தந்திகள் யாவும் அச்சுவேலி யென்று குறிப்பிடாது வசாவிளான் என்றே விலாசமிடப்படவேண்டும். இன்றேல் ஒருநாள் சுணங்க நேரும்.

இந் நிலையத்தில் ஒருவர் ஒருநாளில் ரூபாய் 300 வரை அனுப்பவும் எடுக்கவும் வசதியுண்டு.

## ஆசிரியர் தினம்

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் ஆதரவில் 14-7-51 சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும். கிளைச் சங்கங்களின் தலைவர்கள் விதவை, அனாதை உபகாரச் சம்பளம் என்னும் பொருள் பற்றிப் பேசுவார்கள். மந்திரி பொன்னம்பலம், திரு. [illegible] கனகரத்தினம் எம். பி. [illegible] வி. குமாரசாமி எம். பி. ஆகியவர்களும் சிரிவுரையாற்றுவார்கள்.

# பாதை ஓரத்தில்

மாட்டுக்காரி

நாங்கள் மனம் வைத்தால் இந்தப்பூலோகத்தையே ஒரு கயிலாயமாக்கி விடலாம்.

விலைவாசிகள் கிசு கிசு என்று ஏறிக் கொண்டே போகின்றன. கொழும்பிலே கத்தரிக்காய்க்கும் கீரைக்கும் இப்போது பெரிய அடிபிடியாம். யழ்ப்பாணத்தில் இந்நாட்களில் அம்பலவிமாம் பழத்துக்கே மல்லுக்கட்ட வேண்டியிருக்கின்றது. மட்டக்களப்பில் மீனே கிடைப்பதில்லையாம்.

வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குக் 'க்யூ' வரிசை நீண்டு செல்வது போல் வாழ்க்கையின் இரகசியங்கள் என்ற சினிமாப்படத்தைப் பார்ப்பதற்குங் கொழும்பிலே 'க்யூ' வரிசை மைல் கணக்கில் வளர்ந்து செல்கின்றது.

இத்தனை வில்லங்கங்களுக்குமிடையில நாங்கள் இந்தப் பூலோகத்தில் உயிரோடுதான் இருக்கின்றோம். ஒரு சிலர் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். வேறு சிலர் புதிதாகக் கலியாணம் செய்து புன்னகையுடன் வாழ்ந்துவருகின்றனர். இதன் இரகசியந்தான் என்ன? எல்லாம் மனத்திலேதான் இருக்கின்றது.

### கலியாணம் செய்

வருவாய் காணாது என்று சொல்லி ஒரு சிலர் கலியாணம் செய்யாமல் தப்பிக்கொள்ளப்பார்க்கின்றனர். கலியாணம் செய்து பிள்ளை குட்டிகளுடன் தவில் அடிப்பதை இவர்கள் விரும்புவதாயில்லை. இப்படி எண்ணுவது பெரும்பிழையென ஒருவர் கூறுகின்றார். பிரிட்டனில் நடைபெற்ற ஆராய்ச்சியின்பிரகாரம் கலியாணம் செய்யும் காரிகைகளுக்கு வைத்தியச் செலவு குறைவெனவும், இவர்கள் கன்னியர்களிலும் பார்க்க நீண்ட காலம் இந் நிலவுலகின்கண் வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிகின்றது.

ஆனபடியால் தங்கப்பவுண் விலையேறினால் என்ன, வாழ்க்கைச் செலவு குரல்வளையை நெரித்தாலென்ன, வீட்டு வாடகை குடலைக் கலக்கினாலென்ன கலியாணம் செய்வதே நல்லதாம்.

## சமயச் சச்சரவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தங்களை வரவேற்றே தீரவேண்டும்.

சமயத்தை அனுட்டிக்கும் முறையில் ஏற்படும் நல்ல மாற்றங்களை நாங்கள் ஆதரித்தே யாகவேண்டும். இதை ஏற்க மறுத்தால் சமயத்துக்கு எதிராகவே பல விஷயங்கள் தோன்றிவிடும்.

வேதாந்த நெறியே விஞ்ஞானம் உட்பட சகல சோதனைகளுக்கும் நின்றுபிடிக்கக் கூடியது. முன்னோர் உபதேசித்த உண்மைகளை அறிவதற்கான ஆவல் இக்காலத்தில் ஏற்பட்டேயாக வேண்டும்.

இக்கூட்டத்துக்கு டொக்டர் ஸி. குருசுவாமி அவர்கள் தலைமைவகித்தார். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் ச. அம்பிகைபாகன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறும்போது இன்றைய உலக நிலையிற் சுவாமி அவர்களின் விரிவுரை மிகவும் ஏற்றதொன்றெனக் குறிப்பிட்டிருந்தார்.

### ட்ரீபேக் கல்லூரி

மாணவர்களுக்குச் சரீர உழைப்பு மிக அவசியமெனப் பல்கலைக் கழகத்தின் கணிதப் பேராசிரியர் ஸி. ஜே. எலியேசர் அவர்கள் சாவகச்சேரி ட்ரீபேக் கல்லூரியின் 75-வது ஆண்டுவிழாவிற் பேசும்போது குறிப்பிட்டிருந்தார். இவ்விழா இம்மாதம் 6-ம் 7-ம் திகதிகளிற் சிறப்பாகக்கொண்டாடப்பெற்றது. பரிசளிப்புக் கூட்டத்துக்கு வணக்கத்துக்குரிய அத்தியட்சர் எஸ். குலேந்திரன் அவர்கள் தலைமை வகித்தார்கள். கல்லூரி அதிபர் திரு. கே. எல். சரவணமுத்து அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டதுடன் உள்ளமும் உடலும் ஏக காலத்தில் வளர்ச்சியடையக் கூடிய ஒரு சிறந்த கல்வி முறை அவசியமெனக்குறிப்பிட்டார்.

### சாவகச்சேரி இந்துக் கல்லூரி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் போட்டிவிழா இம்மாதம் 14-க் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மந்திரி ஸி. சிற்றம்பலம் அவர்களின் ஆதரவில் நடைபெறுகின்றது.

## புதுமைப்பித்தன் நிதி

### யாழ்ப்பாணக் கூட்டம்

இலங்கையில் எழுத்தாளர் சங்கம் ஒன்று அவசியமெனப் பண்டிதர் கா. தம்பையா அவர்கள் யாழ்ப்பாணத்திற் புதுமைப்பித்தன் ஞாபகம் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

இக் கூட்டம் யாழ்ப்பாணம் – பெரியகடை, பாரதி பாஷிய வித்தியாசாலையிற் சென்ற 7-7-51-ல் நடைபெற்றது. கூட்டத்தின் நோக்கத்தைத் திரு. க. தி. சம்பந்தன் அவர்கள் விபரமாகக் கூறிய பின்னர், புதுமைப்பித்தன் குடும்ப சகாய நிதிக்குப் பணந் திரட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான சபையும் ஏற்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் அவர்களும் ஆசிரியர் திரு. கனக. செந்திநாதன் அவர்களும் நிதி திரட்டுவது சம்பந்தமான சில யோசனைகளைக் கூறினர்.

புதுமைப்பித்தன் நிதிச் சபைக்கு திரு. ரீ. கே. இராஜசேகரன் எம். ஏ. அவர்கள் தலைவராகவும், திரு. க. தி. சம்பந்தன், திரு. இராஜ அரியரத்தினம் ஆகியோர் செயலாளர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். பொருளாளர்களாக ஆசிரியர் திரு என். தம்பிரத்தினம், திரு. வி. காந்திமதிநாதன் ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்டனர். சபைக்கு வேண்டிய அங்கத்தினர்களும் சேர்க்கப்பட்டனர்.

இக் கூட்டத்துக்கு வர முடியாத அன்பர்கள் பலர் கடிதங்கள் மூலமும் தந்திச் செய்திகள் மூலமும் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

## வானிசை

● வசந்தன் ●

### கொழும்பு வானொலி

2-7-51

திரு. ப. தில்லைராஜா

சிருங்கார ரசத்திலும் சோகரசத்திலும் உள்ள பாடல்களைப் பாவப் பொலிவுடன் நேர்த்தியாகவும் சனரஞ்சகமுமாகப் பாடினார் திரு. தில்லைராஜா சந்தர்ப்பப் பொருத்தமான பாடல்களைத் தெரிந்து பாடுவதில் திரு தில்லைராஜா சமர்த்தர். இவர் தமிழை உச்சரிக்கும்முறை பாடல்களின் பாவத்தைக் குறைக்கிறது.

பின்னணி வாத்தியக் கோஷ்டி

வாத்தியங்கள் அவ்வளவு உதவியளித்ததாகத் தோன்றவில்லை. பின்னணி வாத்தியக் கோஷ்டியினர் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை இங்கு கூறுவது பொருத்தமானது.

1. நிகழ்ச்சியிலுள்ள பாடல்களைப் பாடகரிலும் பார்க்கச் சிறப்பாக வாத்தியகாரர் அப்பியசித்து வாசிக்க வேண்டும்.

2. பாடல்களின் பொருள், இரசபாவம் முதலியன தெரிய வேண்டும்.

3. சில பாடல்களில் ஒன்றுக்குமேற்பட்ட இரசங்களைக் காணலாம், இவ்வித பாடல்களில் பல்லவிக்கோ அனுபல்லவிக்கோ முன்பு வாசிக்கப்படும் இசைக் கோவைகளை அந்தந்த இரச பாவங்களை வெளிப்படுத்தக்கூடியனவாக அமைக்கத் தெரிய வேண்டும்,

4. இன்ன இன்ன கிருதிகள் வாய்ப்பாட்டுக்கு விசேஷமென்றும் இன்ன இன்ன கிருதிகள் வாத்தியத்துக்கு ஏற்றன வென்றும் தெரிந்து கொள்வது அவசியம். நுட்ப சுருதிகள் வரும் இடங்களில், வாத்தியகாரர் பாடகரின் குரலைக் கேட்கச் செய்தல் முக்கியம்.

5. குரலுக்கேற்றபடி வாத்தியகாரர் வாசிக்கவேண்டும். குரல் இனிமை யற்றதாக இருந்தாலும் சில வாத்தியங்களின் சேர்க்கையால் இக்குறைபாடு நீக்கக் கூடும்.

திரு. ஈ. சுப்பையா

கிளாரினெட் – கிளாரினெட் கச்சேரிகள் ரேடியோக்களில் நடைபெற ஆரம்பித்திருக்கின்றன என்றாலும் இவ்வித கச்சேரிகள் பெருமபாலும் நன்றாக அமையாதிருக்கின்றன. கிளாரினெட்டைக் கையாளுவதற்கு அபார திறமை வேண்டும். திரு. சுப்பையாவைப் பொறுத்தவரையில் அவருடைய கச்சேரி நன்றாக அமைந்திருந்தது. இராகவாசிப்பிலே தெளிவு இருக்கின்றது.

3-7-51

திருமதி ஜானகி சங்கரய்யர்

இவர் ரேடியோவுக்குப் புதியவர். அன்று நன்றாகப் பாடினார். அடுத்துவரும் கச்சேரிகள் இன்னும் உயரிய முறையிலமைய வேண்டும்.

4-7-51

திரு. எஸ். வைத்தீஸ்வர ஐயர்

புல்லாங்குழல் – ரேடியோ ஸிலோன் மற்றைய ரேடியோ நிலையங்களிலும் பார்க்கச் சில காரியங்களில் விசேஷ சேவை செய்கிறது. ஒரு சங்கீதத் தொழிலாளி பல துறைகளிற் பயிற்சி செய்தாரென்றால் அவருடைய பயிற்சியை இரசிகர்கள் அளவிடும்படியாகச் சில நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துவிடுகின்றனர். இவ்வித ஒழுங்கின்படி வயலின்காரர் பாட்டுப் பாடுகின்றனர். பாட்டுக்காரர் வயலின் வாசிக்கின்றனர். புல்லாங்குழற்காரர் வயலினும் வயலின்காரர் புல்லாங்குழலும் வாசிக்கின்றனர். இதனால் வரும்

[தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைக்காலம்

## பங்களூர் காங்கிரஸ் கூட்டம்

காங்கிரஸ் மகா சபை சென்ற 66 வருடங்களாக மகத்தான தொண்டாற்றிவந்த பெரிய அரசியல் ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனந்தான் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது. இத்தகைய ஒரு ஸ்தாபனம் அதிகாரம் இழந்து, புறத்தே ஒதுக்கப்படுவதை ஒருவரும் விரும்பமாட்டார். இப்போது அநேக அவசிய விஷயங்களை ஆலோசித்து முடிவு செய்தற்குக் காங்கிரஸ் நிர்வாக சபையின் கூட்டம் பங்களூரில் நடைபெறுகின்றது. புதிய பொதுத்தேர்தலில் காங்கிரஸ் எப்படி நடக்க வேண்டும் என்பதே இங்கு பிரதானமாக யோசிக்கப்படும். தேர்தல் விஷயமாக ஓர் அறிக்கை வெளியிடப்படும். காங்கிரஸ் கட்சியினர் கொள்கைகள் யாவை? அக்கட்சிக்கு ஏன் ஆதரவு அளிக்கப்பட வேண்டும்? என்பதை இவ்வறிக்கை எடுத்துக்காட்டும். வாக்காளர் இக்கட்சியை ஆதரிக்க வேண்டிய அவசியத்தையும் இவ்வறிக்கை எடுத்துரைக்கும். காங்கிரஸில் இருந்து விலகினோரையும் இந்த ஸ்தாபனம் மறுபடி ஏற்றுக்கொள்ளுமென்றும் கூறப்படுகின்றது.

### சாதார் தாராஸிங்

பாஞ்சால் நாட்டில் வசிப்போரில் பெரும்பாலோர் சீக்கியர் என்னும் வகுப்பினர். இவர் இந்துகளுமல்லர், முஸ்லீம்களுமல்லர். இடைநடுவில் புதிய ஒரு மார்க்கத்தை மேற்கொண்டவர். ஆனால் இந்துக்களின் சிலவற்றைப் பெரிதும் மேற் கொண்டவரெனின் பிழையாகாது. தொகையிற் குறைந்த இவ்வகுப்பினர் இப்போது இந்தியாவுடன் சேர்ந்து வாழ்கின்றனர். இவர்களின் தலைவரெனக் கூறிக் கொண்டு சர்தார் தாராஸிங் என்பவர் தோன்றிப் புதிய சிக்கல் ஒன்றைத் தொடக்கிக் கிளர்ச்சி செய்கின்றனர். முஸ்லீம்களுக்குப் பாகிஸ்தான் ஏற்பட்டதுபோல் ஸீக்கியருக்குச் சீக்கிஸ்தான் ஏற்பட வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்றனர். தாம் இந்துக்கள் வகுப்பினைச் சேர்ந்தவரல்லவென்றும் அவரோடு கூடிவாழத் தாம் இணங்க இயலாதென்றுங் கூறுகிறார். ஆனால் மற்றைய ஸீக்கிய தலைவர்கள் இவர் வாதத்தை அங்கீகரிக்கவில்லை. இந்தியாவிலிருந்து பிரிந்த பாகிஸ்தான் படும் பெருந்துயரையும் அலங்கோலத்தையும் நேரிற் கண்டபின்னரும் தமக்கு வேறாக அரசாங்கம் வேண்டுமெனக் கேட்டல் எவ்வளவு புத்திக்குறைவு.

### காஷ்மீர் விஷயம்

காஷ்மீரில் விஷயங்களை நேரில் கண்டு நோக்கி அவைகளை முடிவுசெய்யும் நோக்குடன் வந்த ஐக்கிய நாடுகள்

# அரசினர் கல்லூரி

## நகருக்கு மிக அவசியம்

மட்டக்களப்பு, 11-7-51

சமீபத்தில் மட்டக்களப்புப் பட்டின சபைக் கூட்டம் நடைபெற்றது. அத்திவாரக் கல் நாட்டப்பெற்ற மட்டக்களப்பு நகர மண்டபம் கட்டப்படுவதற்குப் பொது ஜனங்களிடமிருந்து உதவி நிதி வேண்டிப் பட்டின சபை அறிக்கை விடவேண்டுமென்றும் ஆயிரம் அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வழங்குபவரின் பெயர் பொறிக்கப் பெற்ற பளிங்குக் கற்களை மண்டபத்தின் சுவர்களில் பதிக்க வேண்டுமென்றும் ஒரு பிரேரணை சபையிற் சமர்ப்பிக்கப்பட்டது.

### பிரேரணை தோல்வி

பலத்த விவாதத்துக்குப்பிறகு இப்பிரேரணை தோல்வியுற்றது. மட்டக்களப்புப் பட்டினசபைக்குத் தலைவர்களாயிருந்த அத்தனை பேரின் பெயர்களையும் மண்டபத்தின் சுவரில் பொறிக்கவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட பிரேரணையும் தோல்வியுற்றது.

### அரசினர் கல்லூரி

ஏற்கனவே மட்டக்களப்பு அரசினர் கல்லூரிக்காக ஒதுக்கப்பட்ட 9 லட்சம் ரூபாவிற்கும் விரைவில் கட்டிடங்கள் கட்டவேண்டும் எனப் பட்டினசபை அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறது எனப் பட்டினசபை உபதலைவர் திரு. ம. சிவநேசராசா ஜே. பி. அவர்களாற் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு நல்ல ஆதரவிருந்தது. நெடுங்காலமாகத் தொண்டுசெய்துவரும் மைக்கேல் கல்லூரியும, சென்றல் கல்லூரியும் நகரத்திலிருக்கும்போது அரசினர் கல்லூரி அவசியமில்லை என்பதுதான் இப்பிரேரணையை ஆதரியாத ஒரேயொரு அங்கத்தவரின் வாதமாகும். ஏற்கனவே அக்கல்லூரிகள் தொண்டாற்றியது உண்மை. அவை இப்பொழுதும் சிறப்பாகத் தொண்டாற்றிவருவதை மறுக்கமாட்டார்கள். இருந்தும் குறிப்பிட்ட மத சபையினரால் நடத்தப்படும் கல்லூரிகளில் அம் மதத்தவருக்கே விசேஷ சலுகைகள் இடைத்து வருகின்றன. ஆகையால் மதவேறுபாடு அற்ற அரசினர் கல்லூரி ஒரு நகருக்கு அத்தியாவசியமாகிறது. எல்லா மதத்தையும் சேர்ந்த பெற்றோர் அமோகமாக அரசினர் கல்லூரியை ஆதரித்து வருவதே இதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

கிழக்குத் தபால்

நமது நிருபர்

### திருவாசக ஆராய்ச்சி

மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தின் மகாசபை சமீபத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் சபாபதி அவர்கள் தலைமையிற் கூடிற்று. [illegible] கல்வி பயிலும் காரணமாகத் தமது பதவியை விட்டு விலகும் மன்றச் செயலாளர் பண்டிதர் வி. சி. கந்தையா அவர்களுடைய சிறந்த தொண்டை மன்றம் வெகுவாகப் பாராட்டியதுடன், அவருடைய இடத்திற்கு வித்துவான் செ. நடராசா அவர்களையும் தெரிவு செய்தது.

உடனடியாக மன்றம் செய்ய வேண்டிய பணிகளைப்பற்றி அடுத்துத் தீர்மானிக்கப்பட்டது. 8-7-51 முதல் பிரதி ஞாயிறு மாலை தோறும் அரசினர் கல்லூரியில் திருவாசக ஆராய்ச்சி உரைகள் தொடர்ந்து மாகாண வித்தியாதிகாரி திருவாளர் கிருஷ்ண பிள்ளை அவர்களால் நிகழ்த்தப்பெறும். விரிவுரை நிகழ்ந்த முடிவில் அவர் தொட்ட பகுதியில் பலரும் சர்ச்சை செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும்.

### சிவாநந்த வித்தியாலயம்

பண்டிதர் வி. சி. கந்தையா அவர்கள் சிவாநந்த வித்தியாலயத்திலே தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றினர். அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகத்திற் கல்விபெறச் செல்வதன் காரணமாக சிவாநந்த வித்தியாலய ஆசிரியர்கள் ஒரு உபசாரவிருந்து நடத்தினார்கள். வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பலவாணர் அவர்கள் தமது தலைமை உரையில் பண்டிதர் [illegible] மான முறை முதலியவைகளைக் குறிப்பிட்டார்.

## இந்தியா

சங்கப் பிரதிநிதி டொக்டர் கிரஹம் அவர்கள் இப்போது காஷ்மீர் சமஸ்தானத்திற் தலைநகராகும் ஸ்ரீ நகரில் வைகின்றனர். சமஸ்தானப் பிரதம மந்திரியாராகும் ஷேக் அப்துல்லா அவர்களுடன் நீண்ட ஆலோசனை செய்தனர். பாகிஸ்தான் இச் சமஸ்தான விஷயமாகச்செய்துவரும் அக்கிரமங்களை அப்துல்லா அவர்கள் தெளிவாக விளக்கினர். காஷ்மீர் — பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் இடைவிடாது நிகழ்ந்துவரும் அக்கிரமங்களும் இவர்க்கு எடுத்துக் கூறப்பட்டன. டொக்டர் கிரஹம் அவர்கள் தாம் நேரே சென்று இந்த எல்லைப் புறங்களைப் பார்வையிடுவார். சென்ற ஒருமாதகாலமாக எல்லைப்புற அட்டூழியங்கள் அதிகரித்து வருகின்றனவன்றிக் குறைவதாகக்காணேம்.

### பெரிய திட்டம்

அடுத்த ஐந்து வருடத்தில் எத்தனையோ காரியங்களைச் செய்து முடிக்க இந்திய அரசினர் திட்டங்கள் வகுத்துள்ளனர். இவை நிறைவேறின் இந்தியா விரைவில் செல்வம் நிறைந்த நாடாய்ப் பொருளாதார நிலை உறுதியடைந்து உயர்வை அடையக்கூடும். இதன் பொருட்டு அரசினர் 1793 கோடி ரூபா செலவிடத் திட்டம் போட்டுள்ளார். இத்திட்டம் இரண்டு பிரிவாக வகுக்கப்பட்டிருக்கின்றது. முதலாவது பகுதியின்படி கமத்தொழில், நீர்ப்பாய்ச்சல், போக்குவரத்து, சமுதாயத் திருத்தம் என்பவற்றைத் திருத்தியமைக்க 1493 கோடி ரூபா செலவிடத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அடுத்தபடியாகக் கைத்தொழில் ஸ்தாபனங்களை ஊக்கத்துடன் வேலை செய்யப் பண்ணுவதற்கு 300 கோடி ரூபா செலவிடப்படும்.

# கொழும்பு — நிருபர் கடிதம் —

## நெருக்கடி ஆரம்பம்

## ஸ்ரீ பண்டாரநாயகா விலகினர்

கொழும்பு, 13-7-51

சுகாதார ஸ்தல ஸ்தாபன மந்திரியாக இதுவரைகாலம் பணியாற்றி வந்த ஸ்ரீ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா மந்திரி சபையினின்றும் விலகிவிட்டார். எனவே அவர் தமது பதவியைப் பரித்தியாகம் செய்துவிட்டார்.



— ஸ்ரீ பண்டாரநாயகா —

இவர் சிங்கள மகாசபைத் தலைவராகப் பலவாண்டுகாலம் பதவி வகித்து வருவதுடன் யூ. என். பி. கட்சியின் உப தலைவராகவும் இருந்துவந்தார்.

சென்ற மாதம் மாதம்பையில் நடைபெற்ற சிங்களமகா சபையின் வருடாந்தக் கூட்டத்திற் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றை யூ. என். பி. கட்சி ஏற்க மறுத்துவிட்டது. இது சம்பந்தமாகச் சிங்கள மகா சபைத் தூதுக் கோஷ்டியினர் பிரதமர் சேனநாயகாவைப் புதன்கிழமையன்று அவருடைய காரியாலயத்திற் பேட்டி கண்டனர்.

பிரதமர் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை, எனவே தூதுக் கோஷ்டியினர் வெறுங் கையுடன் திரும்பலாயினர்.

இது காரணமாக திரு. பண்டாரநாயகா அவர்கள் ஏதாவதொரு அரசியல் நெருக்கடியை உண்டாக்கக் கூடுமென எதிர்பார்க்கப்பட்டது. அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்த்ததுபோலவே திரு. பண்டாரநாயகா அவர்கள் தமது மந்திரிப் பதவியைப் பரித்தியாகம் செய்துவிட்டுப் பிரதிநிதிகள் சபையில் ஒரு சாதாரண அங்கத்தவர் போல டொக்டர் என். எம். பெரேரா அவர்களுக்குப் பின்னால் அமர்ந்து கொண்டார்.

சுகாதார மந்திரி பண்டாரநாயகா அவர்கள் வியாழக்கிழமை காலை (12-7-51) தமது பதவியை உதறித் தள்ளி விட்டார் என்ற செய்தி காட்டுத் தீபோல் பரவியது. பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தைச் சுற்றி ஒரே கூட்டம். நிதி மந்திரி வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய விபரங்களுடன் வந்து சேர்ந்தார். பின்னர் திரு. பண்டாரநாயகா வந்தபொழுது படம் பிடிப்பவர் பலர் அவரைப் படம் எடுத்தனர். வரவு செலவுத் திட்டப் பேச்சு நிகழும் இந்த முக்கியதினத்தில் ஒரு மந்திரி பதவியினின்றும் விலகிக்கொண்டது குறிப்பிடத்தக்கது. பிரதம மந்திரியவர்களே சுகாதார மந்திரியாகவும் கடமையாற்றுவார். சபை முதல்வராக சேர். ஜோன் கொத்தலாவல நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### கல்வி மந்திரி

இங்கிலாந்துக்கு லீவிற் சென்றிருந்த திரு. ஈ. ஏ. நுகவெல அவர்கள் இலங்கைக்குத் திரும்பிவந்து கடமை பார்க்கத் தொடங்கிவிட்டார்,

### கதிர்காம யாத்திரை

கதிர்காம யாத்திரை ஆரம்பமாகிவிட்டது. மருதானையிலும் கோட்டையிலும் 'அரோஹரா' சத்தம் அடிக்கடி கேட்கலாம். இம்முறை யாத்திரிகர்களை மருதானையிலுள்ள கோயில் மடத்தில் தங்கிநிற்கக் கதிர்காமத் தொண்டர் சபை ஒழுங்கு செய்திருக்கிறது. தீர்த்தத்துக்குக் கிட்டிய நாட்களில்தான் இன்னும் கூடுதலான யாத்திரிகர்கள் வரக்கூடும் என இச்சபை எதிர்பார்க்கின்றது.

### புதுமைப்பித்தன் நிதி

புதுமைப்பித்தன் குடும்ப சகாய நிதிக்குப் பணந் திரட்டும் விஷயத்தில் பல அன்பர்களின் உதவி திரு. குருசுவாமி அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றது. திரு. எம். ஸ்ரீரங்கநாதபிள்ளை மிகுந்த அக்கறை காட்டி வருகின்றார். திரு. சிவமணி, திரு. ஏ. எம். முத்தையாச் செட்டியார், திரு கே. வி. எஸ். சுந்தரம், திரு. ந. நல்லசிவம் ஆகிய பெரியோர்கள் தலைக்கு ரூபா 100 நிதிக்குவழங்கியிருக்கின்றனர். வீரகேசரி ஆசிரியர் ஹரன் அவர்களும், சுதந்திரன் ஆசிரியர் சிவநாயகம அவர்களும் தங்கள் சொந்த முயற்சிபோல் உழைத்து வருகின்றனர். கொழும்பு வானொலி அன்பர்களின் ஆதரவும் குறிப்பிடத்தக்கது. குருநேனியா அன்பர் திரு. ரா. மு. நாகலிங்கம் என்பவரும் இது விஷயத்தில் முயற்சி செய்கின்றார் என அறிகின்றேன்.

### வட இலங்கை ஆயுள்வேத வைத்திய ஐக்கிய சங்கம்

இச் சங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள வடபகுதி உதவிப் பதிவு காரியஸ்தர் காரியாலயத்திற் சமீபத்தில் கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில் அமைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் பெரிய கடைக்கண்மையில் ஒரு மத்திய மருந்துச்சாலையை யமைப்பதென்றும் அங்கே சித்த ஆயுள் வேத முறையில் செய்யப்பட்ட மருந்து வகைகளை வைத்து அங்கத்தவர்கட்கு நியாயமான விலைக்கு விற்பதென்றும், அங்கத்தவர்கள் தம் வைத்திய முறைகளை ஆராய்ச்சி செய்து படிக்க ஒரு மத்திய ஆராய்ச்சிச் சாலையை அமைக்க வேண்டுமென்றும், அங்கத்தவர்களின் தொழில்முறை, பொருளாதார முறைகளை யுயர்த்தும் வழிவகைகளைக் கையாள வேண்டுமென்றும் தீர்மானங்கள் ஆக்கப் பட்டன.

தலைவர்: திரு. மு. கதிரவேலு, கஸ்தூரியார் வளவு, வண்ணார்பண்ணை, உபதலைவர்: திரு. கே. சீ. சண்முகம் எல். ஐ. எம்., காரியதரிசி: திரு. அ. இராசநாயகம் எல். ஐ. எம். தனாதிகாரி: திரு. லீ. வகாம்பரம் டீ. ஐ. எம் என்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொந்தளிப்பு

செ. சி. பரமேஸ்வரன்

## 5. எதிர்பாராதது

இப்போது பூரணத்திற்குப் பொழுது போவதே பெருங் கஷ்டமாகிப் போய்விட்டது. வயல் வேலைகளும் ஓய்ந்துவிட்டன. இதெல்லாம் அவளுக்குக் கவலையை உண்டாக்கவில்லை. சண்முகமும் கொழும்புக் கல்லூரிக்குப் படிக்கப் போய்விட்டான். இனி அவனைப் பார்க்க எத்தனையோ மாதங்கள் செல்ல வேண்டும். இந்தக் கவலைதான் அவளை வாட்டியது. வயல் வெளியில் அவனும் தானும் சந்தித்த போது ஒவ்வொரு தடவையும் பேசிக்கொண்டவை யெல்லாம் அவள் மனதில் அழியாமலிருந்தன. அவற்றை யெல்லாம் திருப்பித் திருப்பி நினைத்து மகிழ்வதுதான் அவளுக்கு வேலை.

சில சமயம் அவள் மனதிற் சில சந்தேகங்கள் உண்டாகும். செட்டியார் குமாரன் சண்முகத்திற்கும் தனக்கும் கலியாணம் நடப்பது நடக்கமுடியாத காரியமாகத் தோன்றும்; மனதிலே துன்பம் உண்டாகும். ஆனால் அடுத்த கணமே சண்முகம் சொன்ன ஒவ்வொரு உறுதியான மொழிகளும் அவள் நினைவில் எழுந்ததும், அத்துன்பம் போனவழி தெரியாமற் போய் மறையும்.

இவ்விதம் அவள் வாழ்நாட்கள் கழிந்துகொண்டிருக்கையில் இடையில் ஓர் சின்னச் சம்பவம் நேர்ந்தது. அவளுக்குக் கொஞ்சம் தூரத்து உறவினனாய், சின்னத்தம்பி என்று ஒருவனிருந்தான். அவன் வன்னி நாட்டில் யாரோ ஒரு செல்வந்தருடைய காணியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கும் பூரணத்துக்கும் கலியாணம் நடத்தி வைத்துவிடுவதென்று ஒருவிதமான பேச்சு இருந்தது.

அவனுக்கு அவனுடைய முதலாளியார் சில நாள் லீவு கொடுத்திருந்தார். அதைக் கழிப்பதற்காக அவன் தன் ஊருக்குச் சென்றிருந்தான். அவனுக்கு இப்போது சில நாட்களாகப் பூரணத்தின் நினைவு அடிக்கடி வந்தது. அவன் தன் முதலாளியாரின் மகன் வைத்திருந்த கதைப் புத்தகம் ஒன்றை வாசித்துப் பார்த்திருந்தான். அந்தக் கதை 'வாழ்க்கையின் உண்மைக் கதை' என்று அதன் ஆசிரியரால் கூறப்பட்டிருந்தது. அக்கதையில் ஏதும் நல்ல அம்சங்கள் இருந்தனவோ, இல்லையோ; அவன் மனதில் அதிலுள்ள 'திருட்டுக்காதல்'தான் பதிந்தது. அக் கதாநாயகர்களைப்போற் தானும் பூரணமும் களித்து மகிழ வேண்டுமென்ற அவன் நினைவு எத்தனையோ முறை கனவிலும் காட்சி கொடுத்துவிட்டிருந்தது.

ஒருநாள் தற்செயலாக வயற் பக்கத்தில் மாடு மேய்த்துக்கொண்டுவந்த பூரணத்தை அவன் தனியே சந்தித்துவிட்டான். ஏதேதோ வெல்லாம் பேசிப் பார்க்க முயன்றான். பூரணம் அவன் எதிர்பார்த்தபடி முகங்கொடுக்கவில்லை.

“என்ன பூரணம்! ஒண்டும் சொல்லாமல் நிக்கிறியே!” என்றான்.

“சீ! உன்னோடை ஆர் பேசுகிறது? எனக்கு நேரமில்லைப் போ!” என்றுவிட்டு மாட்டையும் அடித்துத் துரத்திக்கொண்டு போய்விட்டாள்.

சின்னத்தம்பிக்கு என்ன ஏமாற்றம்? கோபம் கோபமாய் வந்தது அவனுக்கு. அவன் மனசில் அது அடக்க முடியாத நிகழ்ச்சியாய்ப் போய்விட்டதால், அதை வீட்டிலும் எப்படியோ வெளிப்படுத்திவிட்டான்.

அடுத்த நாள் முத்தனின் வீட்டுக்குச் சில விருந்தாளிகள் வந்தார்கள். சின்னத்தம்பியின் தாயும், தகப்பனுந்தான் அவர்கள். அவர்களால் இரண்டு மூன்று வெற்றிலைச் சருகுகளையும், ஒரு புகையிலைக் காம்பையும் இழந்து விட்டான் முத்தன். பிறகு, “பூரணத்துக்கு எங்கையாவது கலியாணம் பேசவில்லையா?” என்று சின்னத்தம்பியின் தாய் கேட்டாள்.

“அதென்ன அப்பிடிக் கேக்கிறாய்; சின்னத்தம்பிக்குப் பூரணத்திற் பிடிக்கவில்லையோ?” என்று முத்தன் ஆச்சரியப்பட்டான்.

“ஏன் பிடிக்காமற்போகுது? சும்மாதான கேட்டது!” என்றான் சின்னத்தம்பியின் தந்தை.

அடுப்பங்கருகில் இருந்த பூரணத்தின் காதில் அவை யெல்லாந் தெளிவாய்க் கேட்டன. அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

## 6. கந்தையாவின் கடிதம்

அன்று அருணாசலம் செட்டியாருக்கு வேலையொன்றுமில்லை. வயல் வேலைகளெல்லாம் முடிந்துபோய்விட்டன. மற்ற இடங்களிற்போல யாழ்ப்பாணத்தில் இரண்டு மூன்று தடவை நெல் விளைவதில்லை. மாரிகாலத்தில் ஒரேயொரு தடவை மட்டும்தான் விளையும். நெல் விளைச்சலுக்குப் பிறகு எள்ளோ, சணலோ காணிகளிற் தலைதூக்கும்.

யாழ்ப்பாணத்தில் விவசாயத் தொழில் விருத்தியடையவில்லை என்று எல்லோரும் நினைக்கிறார்கள். அவர்கள் அருணாசலஞ் செட்டியாரைப் பார்த்தால் அறிவு கெட்டு விழுந்துவிடுவார்கள். அவருடைய பெரிய கல்வீடு, கார் எல்லாம் அந்தக் காணிகள் வாங்கிக் கொடுத்தவைதான்! இதற்காகச் செட்டியாரை “அவர் கெட்டிக்காரன்” என்று ஊரவர்கள் சொல்லி விடுவதில்லை. “எங்கையோ படுகள்ளன்! அவ்வளவும் அநியாய விலைக்கு நெல்லு வித்த காசுதானே?” என்று சொல்வார்கள்.

ஊரில் என்ன பேசிக்கொண்டாலும் செட்டியார் அதைப் பொருட்படுத்துகிறதில்லை. தனக்கு வசதியான விஷயங்களிலேதான் ஊர்ப் பேச்சை அவர் கவனிப்பார்.

“நெல் விலை உயருமா?” என்று யோசித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் செட்டியார். தூரத்திற் தபாற்காரனுடைய உருவம் தெரிந்தது. வீட்டு வாசலில் வந்து அவன் சைக்கிளை நிறுத்தியதும்தான் அவருக்குக் கொஞ்சம் உற்சாகம் வந்தது. “சண்முகம் ஏதோ எழுதியிருக்கிறான்போல இருக்கு” என்று அவர் எண்ணிக்கொண்டு கடிதத்தை வாங்கினார்.

ஆனால் அது அவன் எழுதியதாகக் காணப்படவில்லை. அவன் அழகான ஆங்கிலத்தில் விலாசமெழுதியிருப்பான். இது யாரோ 'புளியங்கொட்டை மாதிரித் தமிழில்' எழுதியிருந்தார்கள்.

அவசர அவசரமாகக் கடிதத்தைக் கிழித்து எடுத்தார். 'கந்தையா' என்று கையெழுத்துப் போட்டிருந்தது. அவர் செட்டியாருடைய கொழும்புச் சிநேகிதர். அவருடைய வீட்டிற்தான் சண்முகம் தங்கிப் படித்துக்கொண்டிருந்தான்.

கொழும்பு
பங்குனி௴ 3உ

அன்புள்ள செட்டியாருக்கு: நான் நல்லசுகமேயிருக்கிறேன். சண்முகம் வெகு கவனமாய்ப் படிச்சுக்கொண்டுவாறான். எனக்குக் கொஞ்ச நாட்களாக ஒரு மனக்குறை. என்ன தெரியுமா? சண்முகத்துக்கு இன்னும் கலியாணம் செய்து வைக்காததுதான். நான் ஒரு சங்கதி எழுதுகிறேன். இங்கே பக்கத்து வீட்டில் சகுந்தலா என்றொரு பெண் இருக்கிறாள். ஒருமுறை பார்த்தீர்களானால் உங்களுக்கே மனம் பிடிச்சுக் கொள்ளும். சண்முகம் படிக்கிற பள்ளிக்கூடத்திலேயே படிக்கிறாள். இரண்டுபேரும் 'ஒருவிதமாய் அடிக்கடி பேசுகிறது, தேடிப் போறது வாறது' இப்படியிருக்கிறார்கள். இதை நீங்கள் ஒரு வழிபண்ணி விட வேணும்.

அன்புள்ள
**கந்தையா**

செட்டியாருக்கு ஆனந்தந் தாங்கவில்லை. “அன்னம்! அன்னம்!” என்று கூப்பிட்டார். மனைவி வந்ததும் “கேட்டியோ கதையை” என்று கடிதத்தைப் படித்துக் காட்டினார்.

அன்னம்மாளுக்கு வெகு ஆனந்தம்! கடைசியில் சாதாரணமாய்க் 'கலியாணத்துக்குப் பெண் பார்க்கப் போகிறதாய்' ஒரு கடிதம் எழுதுவதென்றும், அப்போது அவன் உள்ளதை எழுதி விடுவானென்றும் இருவரும் முடிவு கட்டினார்கள். —தொடரும்


### உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை

1950-ம் ஆண்டில் இலங்கை வித்தியா பகுதியாரால் நடாத்தப்பெற்ற ஐந்தாம் வகுப்பு வித்தியா வெகுமதிப் பரீட்சையின் பேருக, அரசினர் மத்திய கல்லூரியிற் கல்வி பயில வித்தியா வெகுமதி பெற்று, மேற்குறித்த வித்தியாசாலையிலிருந்து மூன்று மாணவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்
**தமிழ்ப்பண்ணை**
யாழ்ப்பாணம். இலங்கை.

**எதிர்கால சேமத்திற்குச் சேமியுங்கள்**

**வாழ்வில் ஓர் திருநாள்**



என் குழந்தைக்கு இப்பொழுது ஐந்து வயது.
1964-ல் வரும் இச் சந்தோஷ தினத்திற்கு என்ன செய்வது?

12 வருட சேமப்பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள்


| வாங்கும் விலை | ரூபா. ச. 5—00 | ரூபா. ச. 10—00 | ரூபா. ச. 50—00 | ரூபா. ச. 100—00 | ரூபா. ச. 1000—00 |
|---|---|---|---|---|---|
| மூலப் பெறுமதி | 7—50 | 15—00 | 75—00 | 150—00 | 1500—00 |

பத்திரங்கள் 3·5 வீதம் கூட்டுவட்டி உழைக்கின்றன.
வட்டிக்கு வருமான வரியில்லை.

**தேசிய சேமிப்பு இயக்கம்**

[4351]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பான மருமக்களே**

வணக்கம். ஈழகேசரி பாலர் பகுதியைச் சேர்ந்த எனது மருமக்களுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி ஒன்றை இவ்வாரம் குறிப்பிட விரும்புகின்றேன். எனது மருமகன் ந. சிவபாதம் என்பவர் ஓகஸ்ட் மாதம் 17-ந் திகதி கொழும்பு வானொலியிற் பேசப்போகின்றார். அவர் எனக்கு எழுதிய கடிதத்தை இங்கு வெளியிட்டிருக்கின்றேன்.

கேசரிமாமா

## மருமக்கள் கடிதம்

**அன்புள்ள கேசரி மாமா அறிவது:**

நான் 'ரேடியோ சிலோன்' ஏற்படுத்திய கிராமாபிவிருத்திப் போட்டியில் பங்கு பற்றியிருந்தேன். 'தன்கையே தனக்குதவி' என்ற தொடரைக் கிராமாபிவிருத்தியில் எவ்வாறு பயன் படுத்தலாம் என்பதே அக் கட்டுரையின் நோக்கமாகும். இப் போட்டி முடிவைச் சென்ற புதன்கிழமை (4-7-51) ரேடியோ சிலோன் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி அறிவித்திருந்தார். இப் போட்டியில் எனக்கு 2-ம்பரிசு கிடைக்கின்றதென்பதை உங்கட்கு மிக மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். பரிசாக ரூபா 20/- கிடைக்கின்றது. அதுவுமல்லாமல் அக் கட்டுரையைக் கொழும்பு சென்று கிராம நிகழ்ச்சிப் பகுதியில் வாசிக்க 2-ம் வகுப்புப் புகையிரத இலவசப் பிரயாணச் சீட்டும் தருகின்றார்கள். எனவே, ஓகஸ்ட் மாதம் 17-ந் திகதி வெள்ளிக்கிழமை ஒலிபரப்ப வருவதாக ரேடியோ சிலோன் அதிகாரிக்கு ஒரு கடிதமும் எழுதியுள்ளேன். ஈழகேசரி பாலர்பகுதி அங்கத்தினருக்கெல்லாம் இச் செய்தி சந்தோஷத்தை ஊட்டுமென்று எண்ணுகின்றேன். இச் சந்தர்ப்பத்தில் ஈழகேசரியையும், கேசரி மாமாவையும் நினைவு கூருகின்றேன். காலாகாலத்தில் நான் இப்படியான பரிசுகள் பெறுவதற்கு முக்கிய காரணராக விளங்குபவர் எங்கள் கேசரி மாமாவாகிய தாங்களே. இப்பொழுது இரண்டு வருட காலமாக ஈழகேசரி பாலர் பகுதிக்கு விஷயங்கள் எழுதி வருகின்றேன். அவ்வப் போதெல்லாம் என் கட்டுரைகளைப் பிரசுரித்தும் வேண்டிய திருத்தங்கள் செய்தும் வந்தீர்கள். நானும் கட்டுரைகள் எழுதுவதில் சிறிதளவு தேர்ச்சியுமடைந்துள்ளேன். ஈழகேசரி பாலர் பகுதி அங்கத்தவர்கள் எல்லோரும் வருங்காலத்தில் இப்படியான பரிசுகள் பெறக் கூடியவர்களாகத் திகழ்வார்களென்றும், சிறந்த எழுத்தாளர்களாக விளங்குவார்கள் என்றும் நான் நம்புகின்றேன். ஈழகேசரியும் கேசரி மாமாவும் வாழ்க என வாழ்த்தி இக்கடிதத்தை இத்துடன் முடிக்கின்றேன்.

மே. 267. ந. சிவபாதம்
பத்தமேனி
அச்சுவேலி, 8-7-51.

## முக்கியமானவை

**மே. 409. சி. துரைச்சாமி**

மாணவர்களாகிய நாம் மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டும். அவையாவன: கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பனவாம். மாணவர்களுக்கு இவை மிக மிக முக்கிய மானவை.

உதாரணமாக நாங்கள் பள்ளிக்கூடத்தில உபாத்தியாயர் பாடங்களை விளக்கப்படுத்தும்போது மிகமிகக் கவனமாகக் கேட்கவேண்டும். அடுத்த படியாகப் பள்ளிக்கூடத்தில் மாணவர்களுடனேயோ, அன்றி வீட்டிலோ அவற்றை நன்றாகச் சிந்திக்க வேண்டும். அதன் பின், யோசித்து உணர்ந்த பின்போ, அல்லது பெரியார்களிடம் கேட்டோ ஐயங்களைத் தீர்த்து அவற்றைத் தெளியவேண்டும். இவை நமக்கு வேண்டியவை என்பதைக் கேசரி மாமாவும் அறிவார்

## பட்டினக் காட்சி

**மே. 376.**
**இ. சந்தானகோபாலன்**

பட்டினங்கள் அழகாகவும், ஆரவாரமாயும் இருக்கும். இங்கே இயற்கைக் காட்சிகளைக் காணமுடியாது. செயற்கைக் காட்சி அதிகம் உண்டு. அழகான வீடுகள், கோட்டைகள், கோபுரங்கள் முதலியன பட்டினங்களில் நிறைந்துள்ளன.

இங்கே அழகிய கடைகள் காட்சியளிக்கின்றன. கடைகள் நெருக்கமாகவும், பற்பல விதமாகவும் இருக்கின்றன. கடைகளில் அத்தேசத்தாரின் உணவுப் பொருள்களும், சிலவற்றில் மற்றும் தேவைப் பொருள்களும், இருக்கும். பட்டினக் கடைகளில் எப்பொழுதும் ஜனங்களின் ஆரவாரம் குறையாமலேயிருக்கும். மனிதருக்கு நல்ல காற்று அவசியம். ஒவ்வொரு தெருக்களிலும் நெருக்கமாக மின்சார விளக்குகள் பிரகாசித்து எரியும். வீடுகளிலும் மின்சார விளக்குகளே எரியும். தண்ணீர் இல்லாத பட்டினங்களுக்குக் குழாய்கள் மூலம் சுத்த ஜலம் கிடைக்கும். பொதுவாகப் பட்டினங்களில் சுகாதாரம் குறைவாகத்தான் இருக்கும்.

பட்டினங்களிலே போக்குவரத்துக் காட்சிகளே முக்கியமானவை. அத்தேசத்துப் புகையிரதப் பாதைகளெல்லாம் பட்டினத்திற்கு ஊடாகவே செல்லும். பஸ் முதலியனவும், மோட்டார் வண்டிகளும் எந்த நேரத்திலும் குறைவில்லாமற் செல்லும். இவற்றின் விளைவால் உண்டாகும் விபத்துக்களும் பல. ஒவ்வொரு நாளும் பட்டினங்களில் ஏதோ ஒரு விபத்து உண்டாகும்.

பட்டினங்களிலேதான் ஜனத்தொகை அதிகமாக இருக்கும். இங்கே பல்வேறு சாதியினரும் வசிக்கின்றனர். அனேக உத்தியோகஸ்தர்களும் இங்கே வசிக்கின்றனர். நாகரிக வாழ்க்கையிலும் பட்டினமே சிறந்தது.

## புதிய மருமக்கள்

**மே.525.** பெ. சரஸ்வதி, நடுத்தெரு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்.

**மே.526.** சு. பாக்கியநாதன், கனகரத்தினம் றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.

**மே.527.** ஆ. சடாட்சரம், கல்வயல், சாவகச்சேரி.

**கி.528.** க. இந்திராணி, மாதகல் விக்கினேஸ்வர வித்தியாசாலை, மாதகல்.

**கி.529.** சி. க. பொன்னம்பலம், 'நாலுவாலை', காரைவாய் தெற்கு, காரைவெட்டி.

**மே.530.** ஐ. அருள்சிகாமணி, கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரி, மாத்தளை.

**மே.531.** ஆ. நவரத்தினம், நிலாவெளி மெ. மி பாடசாலை, திருகோணமலை.

**மே.532.** ந. சுந்தரம் பிள்ளை, அராலி தெற்கு, அராலி.

## மாமா பதில்

**மே.503.** சி. இராமச்சந்திரன்: வேறு நல்ல கட்டுரைகள் எழுதி அனுப்பவும்.

**மே.403.** ம. த. லோறன்ஸ்: "சிவானந்தன்" கிடைத்தது. நன்றி.

**மே.431.** க. அன்னபூரணம்: விடுகதைகள் கிடைத்தன.

**கி.235.** க. பரமேஸ்வரன்: இப்போது உமது இலக்கம் தெரிந்து விட்டதா?

## பிறந்ததின வாழ்த்துக்கள்

**15-7-51 — 21-7-51**

மே. 34. பூ. சுப்பிரமணியம், கி. 63. கு. உருத்திராணி, மே.150. நா. தியாகராசன், மே.204. சி. சடாட்சரம், மே.212. பொ. இரத்தினம்மா, மே.283. ந. நல்லைநாதன், கி. 313. ம. செலீன் கி. 355 அ. மரிய நாயகம், மே.369. ந. குமாரசுவாமி.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

**ஈழகேசரி — பாலர் பகுதி**

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

பிறந்ததிகதி: ..............................

..............................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா :
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

The
# EeLAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union
Founder: N. PONNIAH
T'Phone No. 805

Vol. 22 | Chunnakam, Sunday, July, 15, 1951 | No. 3


## வானிசை

4-ம் பக்கத்தொடர்ச்சி

நன்மை என்னவென்றால், இவ்வித கலைஞர்களுக்கு விஷயம் தெரியாதவர்களின் மதிப்பு உண்டாவதோடு உழைப்பும் கூடுவதேயாகும். இன்னுமொரு நன்மை: தன்னம்பிக்கையில்லாத கலைஞர் இரசிகர்களுடைய மதிப்பைக்கொண்டு தாம் எத்துறையிற் பிரகாசிக்கலாம் என்பதை அறிந்து அத்துறையில் ஈடுபட முடிவு செய்தல். தீமை யாதெனில் இவ்வித கலைஞர்கள் ஒரு துறையிலும் பிரகாசிக்க முடியாமற் போய்விடுவதே.

திரு. வைத்தீஸ்வர ஐயர் வயலின் கச்சேரி நடத்துபவரெனத் தெரிகின்றது. இவருடைய வயலின் கச்சேரியைக் கேட்கவில்லை. இவருடைய புல்லாங்குழல் கச்சேரி கேட்பதற்குத் தொந்தரவில்லாத முறையில் அமைந்திருந்தது. சங்கராபரணம் சிறப்பாக இருக்கவில்லை.

5-7-51

திருமதி விஜயலக்ஷ்மி சண்முகம்பிள்ளை

இவருடைய சாரீரம் இனிமையாக இருக்கிறது. அப்பியாசத்தால் மெருகடையும். 'பண்டுரீதி' என்ற கீர்த்தனம் நன்றாயிருந்தது. கற்பனா சாமும் பாவாயில்லை. காம்போதி இராகத்திலமைந்த ஒரு புதிய உருப்படியைப் பாடினார். காம்போதி இராக ஆலாபனை அவ்வளவு சிறக்கவில்லை. ஒவ்வொரு சுரத்தின் கார்வை எவ்வளவு எனத் தெரியவில்லை. கற்பனைகள் உதிக்கும் நேரத்திற் சாரீரம் இடம் கொடுக்கவில்லை. சில சுரங்களை அளவுக்கு மிஞ்சி நீட்டி அசைத்துக்கொண்டு பாடினார். காகலிநிஷாதம் அல்பமாக வரவேண்டிய இடத்தில் நிஷாதத்தை அளவுக்கு மீறி நீட்டிக் கொண்டிருந்தார். காம்போதியிற் பாடிய கற்பனா சுரங்கள் சுமாராயிருந்தன. இவர் கடைசியிற்பாடிய 'தயில்கொள்ள மறந்தேனே' என்ற ஒரு தமிழ்க் கீர்த்தனம் அருமையாக இருந்தது.

திரு. என். ராஜு

இவருக்குச் சுருதியுடன் இணையும் நல்ல சாரீரம் இருக்கின்றது. சாகித்தியங்களைப் பாவத்துடனும் தெளிவாகவும் பாடினார். கேதாரத்தில் அமைந்த 'வந்தனை செய்தேன்' என்ற பாட்டு ஆரம்பத்துக்கு மிகவும் பொருத்தமாயிருந்தது. தோடி இராகம் பாடிய பொழுது மதுரை சோமசுந்தரத்தின் பாணி நினைவுக்கு வந்தது. தாள உறுதிக்கு வேண்டிய அபபியாசங்கள் அவசியம். சுபாஷினி இராகத்திற் பாடிய சுத்தானந்தர் கீர்த்தனம் நன்று.

6-7-51

திரு. பஞ்சாப கேசன்

நாகசுவரம் — வலஜி இராகப் பாட்டு எடுப்பாக விருந்தது. சண்முகப்பிரியா சோபிக்கவில்லை. அபஸ்வரங்கள் வராது பார்க்க வேண்டும். 'முருகன் என்றதுமே' என்ற இராகமாலிகை நன்றாயிருந்தது. இவரது கச்சேரியைத் தவில் வாத்தியம் வாசித்தவரும் சோபிக்கச் செய்தார்.

திரு. வி. சோமசுந்தரம்

வயலின் — 'நின்னுஜூசி' என்ற சௌராஷ்டிராகக் கிருதியை அழகுடனும் சம்பிரதாய முறையுடனும் வாசித்தார். பிலஹரி இராகம் கமக சுத்தத்துடனிருந்தாலும் ஆலாபனையில் கற்பனைகளைக் காணவில்லை. 'ஸ்ரீ பாலசுப்பிரமணியா' நன்றாயிருந்தது. 'தீர்த்தமு' தெளிவாயில்லை. 'வாகலாடி' அழகாக இருந்தது.

திரு. சோமசுந்தரத்துக்கு நல்ல பாடாந்தரமிருக்கிறது. இவருடைய விரல்கள் இடையிடையே பதறுவதால் பிடிக்கும் சுரங்கள் குறைந்தும் கூடியும் அபஸ்வரமாகக் கேட்கிறது.

7-7-51

செல்விகள்: மீனு நரசிம்மன்
சங்கரி மகாதேவன்

இவர்களுடைய சாரீரம் மிக இனிமையாயிருந்தது. 'ராமா நீவே' நன்றாகவும் சங்கதி விளக்கத்துடனும் விளங்கியது. 'எங்கே தேடுகின்றாய்' பாவத்துடன் ததும்பியது. தோடி இராக ஆலாபனை சோபிக்கவில்லை. சிறுமிகள் பாடும்பொழுது பெருங் கற்பனைகளை எதிர்பார்க்க முடியாவிட்டாலும் ரேடியோக் கச்சேரிகளில் இவ்வித ஆலாபனைகளைச் சிறுவர் எத்தனிக்காமலிருப்பது விரும்பத்தக்கது. ஞானத்தை விருத்தி செய்தபின் வேண்டிய மட்டும் கற்பனா சுரங்களைப் பாடலாம்.

7-7-51

திருமதி லக்ஷ்மி நடராஜன்

இவர் கையாளும்பாணி நன்று. 'பத்மநாப பாஹி' நன்றாயிருந்த போதிலும் தாளம் சில இடங்களில் இழுபட்டது. சங்கராபரண ஆலாபனை குறிப்பிடத்தக்கது. 'அக்ஷயலிங்க விபோ' அழகாயிருந்தது. மிருதங்கம் வாசித்தவர் இடையிடையே சில பொருத்தமற்ற சத்தங்களை உண்டுபண்ணினார்.

திரு. எஸ். கிருஷ்ணசாமி

நாகசுவரம் — இவர் 'மரியாத காதய்ய' என்ற கிருதியை இராக ஆலாபனையின்றி ஆரம்பித்திருக்கலாம். இவர் இராக வாசிப்பு மிக நன்று. கற்பனைகள் நன்றாக வெளிவந்தன.

8-7-51

திருமதி ரஞ்சிதம் அரியதுரை

இவருடைய பாட்டில் லய சுத்தம் இல்லை. தாள அக்கங்களைக் கூட்டியும் குறைத்தும் பாடினார். தெலுங்கிலும் தமிழிலும் பாடினார். ஆனால் ஒரு உருப்படியிலும் இவருடைய தாத்தைக் காணமுடியவில்லை. தேஷ் இராகப் பாட்டு சோபிக்கவில்லை. 'வான வெளிதனிலே' என்ற திருப்புகழை யார் பாடினாரென்று அறிவதற்குப் பாடப் புத்தகத்தைப் புரட்டினேன். அது கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் நூலிற் காணப்பட்டது!

9-7-51

திரு. எம். ஆர். சுயம்புலிங்கம்

இவர் பழைய காலத்து நாடக பாணியிற் பாடினார். உருப்படிகள் சில புதிதாக இருந்தன.

திருமதி பொன்மணி செல்லையா

இவர் வாத்தியக் கோஷ்டியுடன் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டிலும் பாடினார். கம்பீரமாகப் பாடப் பழகிக்கொள்ள வேண்டும்.

10-7-51

திரு. பி. எஸ். நமசிவாயம்

இவர் பைரவி இராகம் பாடினார். அதில் பூரணதவில்லை. அடாணாவில் 'தாய்மொழி' என்ற பாடலைப் பாடியபோது சில இடங்களிலே தெளிவாக உச்சரிக்கவில்லை. சாரீரத்தைக் கட்டுப்படுத்தி இனிமைபெறச் செய்ய வேண்டும்.

## கூட்டுறவுக் கிராமம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கதைகளில் வாசித்திருக்கின்றோம் அல்லவா? அப்படியான ஒரு சம்பவம் எனக்கு முதல் முதலாகச் சிவிய காலத்தில் கிடைத்தது. ஆனால் காலை நிலத்தில் திடனமாக வைக்கமுடியவில்லை. உறைந்த பனி காலை வழுக்கியது. முதலில் விளையாட்டுப் போல் இருந்தது. ஆனால் சிறிது தூரம் செல்லச் செல்லக் கஷ்டம் அதிகரித்தது. "வழுக்கி வீழினும் நின் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூறிய பாசுரம் மனதில் உதித்தது. பாதை சற்றே இலகுவாக இருப்பது போல் தோன்றியது. கூடிய மன உற்சாகத்துடன் சென்று நூதனசாலையையும் பின் மிருகசாலையில் வடதுருவத்தில் வசிக்கும் கரடிகள், மான்கள், கடற் குதிரைகள் முதலியனவற்றையும் பார்த்தேன். பகல் இரண்டு மணியாயிற்று. அப்போதும் பனி குறையவில்லை. பனி நிறைந்த தேசத்தில் அதுவும் கார்த்திகை மாதத்தில், வாட்டும் வெயிலில் வாழும் யாழ்ப்பாணத்தவனுகிய நான் வந்தது பொருத்தமில்லை என்பதை உணர்ந்து குரங்கு மனத்தின் வேகத்தினையும் பனியில் வழுக்கிச் செல்லும் காலின் வேகத்தினையும் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க என்று வாழ்த்தி மெதுவாக வாடிவீடு வந்து சேர்ந்தேன். — தொடரும்

## அகில இலங்கைச் சைவ ஹரிஜன மகாசபை ஆலோசனைக் கூட்டம்

இக் கூட்டம் 8-7-51 ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மகாசபைத் தலைவர், பண்டிதர் திரு. மு. செல்லையா அவர்கள் தலைமையிற் கூடிற்று. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பல அங்கத்தவர்கள் சமுகம் கொடுத்து ஆதரவளித்தனர்.

முதலில் ஆலய விசாரணைச் சபையாரின் அறிக்கை பற்றி ஆராயப்பட்டது. பின்னர் வடமாகாணத்திலுள்ள பிரதிநிதிகள் சபைத் தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றிலிலும்ஒவ்வோர்பொதுக் கூட்டம் அவ்வத் தொகுதிகளிலுள்ள சைவ ஹரிஜனமக்களின் பொதுஸ்தாபனங்களின் ஆதரவிற் கூட்டப்படவேண்டுமென்றும், அத்தகைய முதலாவது கூட்டம் கோப்பாய்த் தொகுதியில் நடைபெறுமென்றும், பிரதிநிதிகள் சபையின் இந்த அங்கத்தவர்களைப் பேட்டி கண்டு அவர்களின் ஆதரவைத் தேடவேண்டுமென்றும், இந்த மகாசபைக்கு நிலையான ஒரு நிதி திரட்டவேண்டுமென்றும் ஆலோசிக்கப்பட்டது.

## மணிவாசகப் பெருமான்

மணிவாசகப் பெருமாள் குருபூசை காரைநகர் சிவன் கோயில் மணிவாசகர் மடாலயத்தில் இம்மாதம் 8-ந் திகதி கொண்டாடப்பட்டது.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 6837

அராலிமேற்கு
சிதம்பரப்பிள்ளை வயித்திலிங்கம்
வழக்காளி

வட்டுக்கோட்டை மேற்கு
1. சின்னையா மார்க்கண்டையர்
2. பெண் ஜெயதாம்பாள்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 6837-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1951-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 11-ந் திகதி (11-8-51) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:** முதல் வட்டி ரூபாய் 729-70-ம் இதில் ரூபாய் 600-க்கு 21-7-50 திகதி தொடக்கம் 30-10-50 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 153-83 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிச் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை "நாகவன்புலம்" கிலப் பரப்பு ஐந்து (5)ம் குளி 6-ம், வீட்டிலும், தலைவாசலிலும், தெற்குப் பக்கமாய் அரைவாசியும், கிணறும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, ஒழுங்கையும், இக்காணிக்கும் வடக்கெல்லைக் காணிக்கும் பொதுவாக விடப்பட்ட படலை முகப்பும் கை ஒழுங்கையும். வடக்கு, தம்பு ஐயர் கைம்பெண் பராசக்தி அம்மாவின் ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலும். முற்பதிவு E. $\frac{255}{92}$.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை
26-7-51 [4353]


இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 7221.

வட்டுக்கோட்டை கிழக்கு,
சாமுவேல் இளையதம்பி
வழக்காளி

வட்டுக்கோட்டை கிழக்கு
1. வேலு அரியம் தானுகவும் தனது பெண் காலம் சென்ற சூசின் நல்லம்மாவின் ஆஸ்திக்குப் பிரதி காரியஸ்தாாகவும்
2. வேலு அரியம் மகள் ஞானக்கன்னி இவவின் பராமரிப்புக்காரன் 1-ம் எதிராளி.
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் 7221-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை, 1951-ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 18-ந் திகதி (18-8-51)சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1611-40-ம், இதில் ரூபாய் 1000-க்கு 27-10-50 திகதி தொடக்கம் 18-12-50 திகதி வரைக்கும் 100-க்கு 7 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 252-51 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "காவோடை" கிலப் பரப்பு இரண்டு (2)ம் குளி 14-ம் புதிதாகக் கட்டிய கல்வீடும், செய்பயிர், வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை பெண் சூசின் அமிர்தம்மாவின் ஆதனம். வடக்கு கந்தர் மயில்வாகனத்திற்கும், கந்தர் காசேசுவக்குமுரிய ஆதனம். மேற்கு 1-ம் எதிராளியின் ஆதனம். தெற்கு செல்லத்தினம் அப்புத்துரை பெண் செல்லம்மாவின் ஆதனம். இதடங்கலும் இன்னும் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் $\frac{1}{5}$ பங்கும் தாரவை வழிவாய்க்காலும். ஆனல் ஆறு அடி அகலமுள்ள வழிவாய்க்கால் புறநீங்கல்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 26-6-51 [4352]



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

பங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா, 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
ஊச்சநிறு சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாகுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றுதக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா கோட்டு வட்டகதிந்து மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
கிளார்க்
[4335]



இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, [illegible], முத்தையா சபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு ஜூலை 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org